கழக வெளியீடு: ௯௭௭.

பரமார்த்த குரு

செம்மைப்படுத்திய புதிய பதிப்பு

:: திருநெல்வேலித் தென்னிந்திய ::
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி, :: சென்னை - 1.

First Edition: March, 1951

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, :: MADRAS-1.

Head Office:

24, EAST CAR STREET :: THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras - 1.

பதிப்புரை

மக்களின் அறிவைத் திருத்தி நல்வழியிற் செலுத்துவன கதைகளே. அவைகளுள் 'பரமார்த்த குரு' என்னும் இக் கதையும் ஒன்றாகும்.

இதை எழுதியவர் 'தேம்பாவணி' ஆசிரியர் ஆகிய வீரமாமுனிவரெனச் சிலரும், சுப்பிரதீபக் கவிராயரெனச் சிலரும் கூறுவர். அஃது எங்ஙனமாயினும் இஃது அறிவு விளக்க அமைந்த சிறந்த கதையென்பது யாவரும் அறிந்ததே.

முன்னமேயே பலராலும் வெளியிடப் பெற்றிருக்கும் இந்நூல், தனித்தமிழ் உரைநடையில் சிறு சொல் தொடர்களினால் அமைத்துப் புதிய பதிப்பாக வெளிவருகின்றது.

இதனை யாவரும் வாங்கிக் கற்றுப் பயனடையுமாறு வேண்டுகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

பரமார்த்த குரு

க. ஆற்றைக் கடக்கச்செய்த சூழ்ச்சி

பரமார்த்த குருவும் அவர் மாணவர்களும்

பரமார்த்தகுரு என்றெரு ஆசிரியர் இருந்தார். அவர் ஏவிய ஊழியம் செய்ய அவரிடம் மட்டி, மடையன், பேதை, மிலேச்சன், மூடன் என்னும் பெயர் கொண்ட ஐவர் மாணவர்களாக இருந்தனர். ஒருநாள் குருவும் மாணவர் ஐவரும் ஆக அறுவரும் வெளியூர்களில் உள்ள மற்ற மாணவர்களைப் பார்த்துவர எண்ணினர்; அவ்வாறே ஒருநாட் காலையில் பக்கத்தில் உள்ள சிற்றூர்களுக்குக் கால்நடையாய்ப் புறப்பட்டு நடந்து சென்றனர். மாணவர் நலம் உசாவித்திரும்பினர். வழியில் ஓர் ஆறு இருந்தது; அதற்கு மூன்ரும் சாமத்துக்கு வந்து சேர்ந்தனர். அவ் வாற்றைப் பார்த்து அதிலிறங்குவதற்கு அஞ்சி "இது மிகவும் பொல்லாதது; ஏமாற்றும் தன்மையுடையது; ஆகையால் இது விழித்திருக்கும் போது இதைக் கடந்து போகக்கூடாது, ஆறு தூங்குகின்றதோ? விழித்திருக்கின்றதோ? ஆராய்ந்து பார்," என்று குருவானவர் மிலேச்சனை ஏவினர்.

மிலேச்சன் ஆற்றை ஆராய்தல்

அவன் தன் குருவின் கட்டளையைத் தலைமேற் கொண்டு அப்போது புகைச் சுருட்டுப் பற்றவைக்கத் தன் கையில் எடுத்த கொள்ளிக்கட்டையைக் கொண்டு

போய், தான் ஆற்றில் இறங்காமல் எட்டிநின்று நீரிலே தோய்த்தான். உடனே நீர் 'சுறீர்' என்ற ஒலியுடன் புகைந்தது. அதைக் கண்ட மிலேச்சன் பதறினான்; நடுங்கிக் கீழே விழுந்தான்; பதைபதைத்தான்; உதைத்துக்கொண்டு மெல்லென எழுந்தான்; நடுங்கினான்; அஞ்சி அலறி உளறி அழுதுகொண்டு, குருமுன் ஓடி வந்து "ஐயா! ஐயா! நதியைக் கடப்பதற்கு இது தக்க வேளையல்ல. ஆறு விழித்துக்கொண்டிருக்கிறது. நான் தொட்டவுடனே அது நஞ்சுள்ள நாகப்பாம்புபோல சீறிக் கொதித்துச் சினந்து இரைந்து புகைந்தெழுந்து பாய்ந்து என்னைக் கொல்ல வந்தது. அதன் சினத்துக்கு இலக்காகாமல் தங்களின் உயர்ந்த பேரருளினாலும் என்னைப் பெற்றவள் செய்த பெருந் தவத்தாலும் நான் உயிர்தப்பிப் பிழைத்தேன்; மீண்டு வந்தேன்; அது மிகவும் வியப்பு," என்றான்.

அதைக் கேட்டுக் குருவானவர் திடுக்கிட்டு மயங்கிப் பின்பு தெளிந்து "அப்பா தெய்வச் செயலை யார் அறியக்கூடும்? ஆறு கண்ணுறங்குகின்ற வரைக்கும் சிறிதுநேரம் காத்திருப்போம்," என்றார். பின் அவரும் அவர் மாணவர்களும் ஆற்றின் பக்கத்தில் உருத்தெரியாமல் இருள் சூழ்ந்த ஒரு பூஞ்சோலையில் தங்கியிருந்தார்கள். அங்கே பொழுதுபோக்குக்காக அந்த ஆற்றின் சிறப்புகள் பற்றி ஒவ்வொருவரும் தனித்தனியே சொல்லி வந்தனர்.

மட்டி ஆற்றின் சூழ்ச்சி முதலியவற்றைக் கூறல்

அப்பொழுது மட்டி என்னும் மாணவன், "அடிகளே! இந்த ஆற்றின் சூழ்ச்சியையும் கொடுமையையும் குறித்து என் பாட்டனார் பலமுறை சொல்ல

நான் நன்ருய்க் கேட்டிருக்கிறேன். என் பாட்டனுர் ஒரு பெரிய வணிகர்; அவர் ஒருநாள் உப்புப் பொதி ஏற்றின இரண்டு கழுதைகளைத் தாமும் தமது கூட்டாளியுமாக ஓட்டிக்கொண்டு நடு ஆற்றில் இறங்கினர்; அப்பொழுது கோடைக்காலம்; வெப்பம் மிகுதி. அது தணிய அரையளவாய் ஓடுகின்ற குளிர்ந்த தண்ணீரிலே அவர்கள் தாங்களும் குளித்துக் கழுதைகளையும் நிறுத்திக் குளிப்பாட்டினுர்கள்.

ஆறு உப்பை உண்ட கதை

பிறகு அவர்கள் அக்கரைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். ஊசியினுல் உறுதியாய்ச் சந்தில்லாமல் தைத்திருந்த



கோணிப்பையின் வாய் சற்றுந் திறவாமல் அப்படியே இருந்தது. ஆனுல், அதற்குள் இருந்த உப்பையெல்

லாம் ஆருனது 'தோலிருக்கச் சுளைவிழுங்கிபோல்' சூழ்ச்சியாய்த் திருடித் தின்றுவிட்டது. அவர்கள் அதைக்கண்டு 'ஆ! ஆ! இந்த ஆறு நாம் கொண்டுவந்த உப்பையெல்லாம் கொள்ளையடித்துத் தின்றதினுல் அல்லவா எங்களை விழுங்காமல் விட்டுவிட்டது. உப்பு போனுற் போகிறது; அந்த மட்டில் நல்ல உதவி செய் ததே; இதுவே பெரிய நன்மை,' என்று நினைத்து அவர்கள் களிப்படைந்தார்கள்," என்று சொன்னுன்.

மாணவர்கள் குருவுக்குக் குதிரை வாங்க முடிபு

இவ்வாறு பேசிக்கொண்டிருந்தார்கள்; அங்கு ஒருவன் குதிரையில் ஏறிவந்தான்; அவனை இவர்கள் கண்டார்கள். அந்த ஆற்றில் ஒரு சாண் அளவு உயரம் தண்ணீர்தான் ஓடிக்கொண்டிருந்தது. அதைக் குறித் துச் சிறிதும் அஞ்சாமலும், கூசாமலும் குதிரையில் இருந்தவாறே அவன் 'சரசர' வென்று விரைவாகக் கடுகி வந்தான். அதைக் கண்டு அவர்கள் "அடடா! எங்கள் குருவுக்கு ஒரு குதிரையிருந்தால், அவரும் அவரைச் சார்ந்த நாங்களும், அச்சமில்லாமல் ஆற்றில் இறங்குவோமே! அது இல்லாததினுல் அன்றோ இப்படித் தியங்கி நிற்க வேண்டிவந்தது? இனி எப்படியாயினும் ஒரு குதிரை வாங்கவேண்டும்," என்று தங்களுக்குள் உறுதி செய்துகொண்டு, அதைக் குருமுன்பு விண்ணப் பஞ் செய்தார்கள்.

அவர் "இந்தச் செய்தியைப்பற்றிப் பின்பு பேசு வோம், இப்போது பொழுதடையும் காலம் ஆகிவிட்டது. மடத்திற்குப் போகவேண்டுமே; ஆகையால் ஆறு தூங்குகிறதா? என்று மீண்டும் ஆராய்ந்து பாருங்கள்," என்று தம் மாணவர்கட்குச் சொன்னுர்.

மடையன் ஆற்றை ஆராய்தல்

உடனே மடையன் அந்தக் கொள்ளிக்கட்டை யையே கொண்டுபோய்த் தண்ணீருக்குள் தோய்த்து ஆராய்ந்தான். அக் கொள்ளியிற் பற்றிய நெருப்பு முன்னரே அவிந்து போனதனால், ஆற்றில் சிறிதும் புகை கிளம்பவில்லை. அதனால் அவன் மிகவும் களிப்படைந்து ஓடிவந்து "அடிகாள்! இதுதான் நல்லவேளை? நல்ல வேளை? இப்படிப்பட்டவேளை இனிக் கிட்டாது; வாயைத் திறவாமல் ஒலிசெய்யாமல் சுணங்காமல் விரைவாய் எல்லோரும் எழுந்து வாருங்கள்! வாருங்கள்! ஆற்றுக்கு நல்ல ஆழ்ந்த உறக்க வேளையாயிருக்கிறது; இப்பொழுது சிறிது அஞ்சவும் பின்னிடவும் வேண்டி தில்லை," என்றான்.

இந்த நற்செய்தியை மடையன் சொல்லிக் கூப்பிட எல்லோரும் திடீரென்று எழுந்து 'இம்' என்னாமல் ஒடுக்கமாய் ஒருவரை ஒருவர் சேர்த்துக் கட்டிக்கொண்டு ஆற்றில் இறங்கினர். அலைகளும் அதிராதபடி மெது வாகக் காலைத்தூக்கி ஒவ்வோரடியாகத் தண்ணீருக்குள் வைத்து நடந்தனர்; பின்பு நெஞ்சம் துணுக்கென்று பதைபதைக்க மெதுவாக ஆற்றைக் கடந்தனர்; கரை யேறினர்.

கரையேறினவர்களைக் கணக்கிடல்

அவர்கள் கரையேறியவுடன் முன்பு அடைந்த துன்பங்கட்குத் தக்கதாக மிகமகிழ்ந்தனர்; தலைகால் தெரியாமல் துள்ளிக் கூத்தாடிக் கொண்டிருந்தனர்; அப்பொழுது மூடனானவன், "நாம் எல்லோரும் கெடுதல் இல்லாமல் வந்து சேர்ந்தோமோ? எண்ணிப்பார்ப் போம்," என்று தன்னை மட்டும் எண்ணிக்கையில் சேர்க்

காமல் மற்றவர்களை எண்ணினான். எண்ணிப் பார்க்கையில் ஐவரே இருந்தனர்; அதுகண்டு, "அப்பப்பா! ஐயையோ! இஃதென்ன பேரிழவு? நம் அறுவரில் ஒருவன் ஆற்றோடே போய்விட்டான்; ஐந்துபேர் மட்டுந்தான் இருக்கிறோமே!" என்று குருவைப்பார்த்துத் தேம்பித் தேம்பி அழுதான்.

குருவானவர் அவனை "அழவேண்டாம்," என்று கையமர்த்தி, அவர்கள் எல்லோரையும் வரிசையாய் நிறுத்தி ஒருகால் இருகால் முக்காலும் அவரவரைத் தனித் தனியே நிறுத்தித் தமது விரலை நீட்டிச் சுட்டிச் சுட்டித் தாமே எண்ணிக் கணக்குப்பார்த்தார். அவ்வாறெண்ணும்போதெல்லாம் அவரும் தம் மாணவனைப்போலவே, தம்மைவிட்டுவிட்டுக் கணக்கேற்றி எண்ணினார். அவர் "ஆமப்பா நீ சொன்னபடி மெய்யாகவே ஐவர் மட்டும் தான் இருக்கிறோம்," என்று சொல்லி வருத்தப்பட்டார்; அழுதார்; புரண்டார். அவ்வாறே ஒவ்வொருவரும் தம்மைவிட்டு ஒழிந்தவர்களை மட்டும் எண்ணிக் கணக்கெடுத்தனர். கடைசியில் ஆறுபேரில் ஒருவனை ஐயமில்லாமல் ஆறு விழுங்கிவிட்டதென்று அவர்கள் தமக்குள்ளே உறுதி செய்து கொண்டார்கள்.

ஆற்றைப் பழித்துரைத்தல்

பிறகு, குருவும் மாணவர்களும் அலறியழுது 'கூகூ' என்று கூச்சலிட்டுக் கண்ணீர் சோரும்படி நதியைப் பார்த்து, "ஓ பாவி ஆறே! வஞ்ச ஆறே! பரமசண்டாள ஆறே! கொடும்புலி கொல்லும் கடுங்கொலையாளா! மண்ணிலும் விண்ணிலும் வாழும் நிலையுயிர் இயங்குயிர்களெல்லாம் வாழ்த்தி வணங்கும் தகையவர்; ஒழுக்கமனைத்தும் திரண்டு ஒருருவம் தாங்கி வந்தாலென

வந்தவர்; பாவங்களை ஒழித்தருளும் உண்மையாளருடைய—எம் குருநாதருடைய சிறந்த மாணவர்களில் ஒருவனை ஒரு நொடிப் பொழுதில் வஞ்சக் குணத்தாற் கொள்ளை கொண்டாயே! எள்ளளவாயினும் இரக்கமில்லாமல்—கிழங்குபோல் விழுங்கிவிட்டாயே! அஞ்சுதல் என்பது கொஞ்சமும் இன்றி வாழைப் பழம்போல் விழுங்கிவிட்டாயே! உன் மனம் உருகாதா? இரும்போ? கல்லோ? நீ பெண்ணுடன் ஆணுடன் பிறக்கவில்லையோ? நன்றிகெட்ட நாசகாலா! நீயும் உலகத்தில் நிலைத்திருப்பாயா? அண்டத்தளவும் அலையெறிவாயா? கடல்போல் முழங்கிக் கரைபுரள்வாயா? குளிர்வெண் முத்தம் கொழித்திடுவாயா? இனி நீ உண்ணீர் வற்றி ஊற்றுக்கள் அடைபட்டு, பள்ளந் தூர்ந்து, வெள்ளம் மாறி, உள்ளம் வெதும்பி, உருவு தோன்றாமல் பாழாய்ப் போவாய்,'' என்று அந்த ஆற்றைவைது பின்னும் பித்துப் பிடித்தாற்போலத் தாறுமாறாக வைது கொண்டிருந்தார்கள். அதுவரையில் ஆற்றால் கொண்டுபோகப்பட்டவன் யாரென்று அவர்கள் அறிவின்மையால் அவர்களுள் ஒருவனும் அறியவில்லை. அவன் எவனென்றும் என்ன பெயர் உடையவனென்றும் அவர்கள் ஒருவரை ஒருவர் கேட்டுத் தெரிந்துகொள்ளவுமில்லை.

அறிஞன் ஒருவன் ஆறு கொண்டுபோனவனைத் தெரிவித்தல்

அத்தறுவாயில் அறிவுடைய வழிப்போக்கன் ஒருவன் அங்கு குதிரையேறி வந்தான்; அவர்கள் அழுது துன்புறுவதைப் பார்த்து மனமிரங்கினான்; அவன் குதிரையை விட்டு இறங்கினான்; அவன் அவர்களைப் பார்த்து "ஏனையா துன்பப்படுகின்றீர்கள்? உங்களுக்கு என்னநேர்ந்தது? யாராவது மாண்டார்களா? சொல்லுங்கள்," என்றுகேட்டான். அவர்கள் நடந்ததை விரிவாகக்

கூறினார்கள். அவன் இவர்கள் அறியாமையை அறிந்தான். பிறகு அவன், "அட அப்பா! இது மிகக் கடுமையான செயல். இது என்னாலன்றி மற்றொருவர் யாராலேயும்முடியாது. நான் மந்திரத்தொழிலில் மிகச் சிறந்தவன். நான் அதர்வண வேதம் பார்த்து இட்டது பிச்சை, எனக்கு எட்சணி, மோகினி, குட்டிச்சாத்தான் முதலானவைகளும் அடங்கியிருக்கின்றன; அவைகள் நான் சொன்னபடி ஆடுகின்றன. நான் இட்ட கட்டளையையும் அட்டியின்றிச் செய்கின்றன. எனக்கு நீங்கள் நல்ல பரிசுகள் கொடுத்தால், ஆற்றோடே போனவனை அரை நொடியில் அழைப்பிக்கின்றேன்; அப்பொழுது என் வல்லமையைப் பாருங்கள்," என்றான்.

குருவானவர் அதைக்கேட்டு மகிழ்ந்தார். அவர், "அப்பா! நாங்கள் திகைப்புற்றுத் தடுமாறும் இவ்வேளையில் மகாராசனாகிய நீ, எங்கள் குலதெய்வம் போல எங்களைக் காப்பாற்ற எங்கிருந்து வந்தாயோ தெரியாது. ஆனாலும் நீ, இப்போது செய்யப்பட்ட இப் பேருதவிக்கு ஈடு ஏது? இதற்கு எளியவர்கள் ஆகிய நாங்கள் உனக்கு என்ன செய்யப்போகின்றோம்? உன் குருவுக்குப் புண்ணியமாய்ப் போகிறது, எப்படியாவது பெரிய மனது வைத்துப், போனவனை அழைப்பித்துக் கொடுத்தால், அது செய்யாமற் செய்த உதவியாக இருக்கும்.

*'செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது'

என்று, ஆன்றோரும் கூறியிருக்கிறார்கள். ஆயினும் எங்களுக்கு வழிச்செலவுக்கு நாற்பத்தைந்து பணந்தான் முன்தானையில் முடிந்து வைத்துக்கொண்டிருக்கிறோம்.

---

* திருக்குறள் - ௱௧.

வேண்டுமானால் அதை உன் கையில் கொடுத்துவிடுகிறோம்; தயவு செய்து ஆறு கொண்டுபோனவனை அழைப்பிக்கவேண்டும்'' என்று சொன்னார்.

அறிஞன் குரு, மாணவர்களை இருப்புத் தடியால் அடித்தல்

அவன் "அப்படியே ஆகட்டும்,'' என்று தன் கையில் ஏந்திய வச்சிர உலக்கைபோல் பருத்து நீண்ட இருப்புப் பூண் கட்டிய தடியை அவர்களுக்குக் காட்டி, 'நான் சொன்ன மந்திர வியப்புத் தொழில் இதில்தான் இருக்கிறது, நீங்கள் யாவரும் வரிசையாய் நில்லுங்கள் ; முகத்தைச் சுளிக்காதீர் ; மகிழ்ச்சியாக ஒரு வேண்டுகோள் செலுத்துதல்போல் கும்பிட்டுக் குனிந்து கொடுத்து இந்தத் தடியால் முதுகில் ஆளுக்கொரு அடிபட்டுக் கொண்டு அவனவன் தன் பேரைச் சொல்லி எண்ணிவர வேண்டும். அப்படிச் செய்தால் ஆறு பேரையும் இவ்விடத்தில் இப்பொழுதே நேராக வந்திருக்கச் செய்வேன்,'' என்றான். அவர்கள் எல்லோரும் "நல்லது அப்படியே செய்யுங்கள்,'' என்று ஒப்புக்கொண்டார்கள்.

பின்பு மந்திரத் தொழிலோன் அவர்களை வரிசையாக நிறுத்தினான் ; முதன் முதல் குருவின் நடு முதுகைப் பார்த்து அந்தத் தடியால் தன் கை கூசாமல் ஓங்கி மிகவும் உரமாக ஓரடி கொடுத்தான். அவர் "அப்பாடா போதும்! போதும்! நான்தான் பரமார்த்த குரு,'' என்றார். அப்போது அந்த அறிஞன் இவன் "ஒன்று'' என்றான். இந்தப்படியே எல்லோரையும் ஒவ்வோர் அடி அடிக்க, அவர்களில் ஒருவன் "நான் மடையன்,'' என்றும், ஒருவன் "நான் மட்டி''யென்றும், ஒருவன் "நான் மூடன்'' என்றும், ஒருவன் "நான் மிலேச்சன்'' என்றும், ஒருவன் "நான் மூர்க்கன்'' என்

றும், ஒவ்வொருவராகத் தங்கள் பெயர்களைச் சொல்ல, அவன் கணக்கேற்றினான். பின்பு அவர்கள் ஆறு பெயரில் ஒருவனும் குறையாமல் இருக்கக் கண்டு "சரி சரி"



அறிஞன் ஒருவன், குரு முதலியவர்களை அடித்தல்

என்று அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். அதன் பிறகு அவ் வறுவரும் வியப்புற்று, மாயத் தொழிற் றேர்வாளனாகிய அவ்வழிப் போக்கனை மெய்ச்சிக்கொண்டு அவன் காலின்கீழ் உடலுறுப்பெல்லாம் கீழே படிய வணங்கியெழுந்து அவனைப் பலவாறாகப் புகழ்ந்தார்கள்; முன் சொன்னபடி அவனுக்கு நாற்பத்தைந்து பணத்தையும் அவிழ்த்துக் கொடுத்துவிட்டுப் போனார்கள்.

உ. குதிரை முட்டை வாங்குதல்

குருட்டுக்கிழவி குருவுக்குக் கணக்குத் தெரிய வழி கூறியது

பரமார்த்த குருவும் தம் ஐந்து மாணவர்களும் மடத்துக்குச் சென்றபின்பு, ஆற்றிலே தாங்கள் பட்ட துன்பத்தைப் பலகாலும் பலரிடத்தும் சொல்லிச் சொல்லி வருத்தமுற்றார்கள். அப்பொழுது மடத்தைப் பெருக்கிக்கொண்டிருந்த ஒருகண் கெட்ட குருட்டுக் கிழவி நடந்தவைகளையெல்லாம் தீரக் கேட்டு கை கொட்டி நகைத்தாள். அவள் "ஆ! ஆ! நீங்கள் ஆற்றைத் தாண்டி வந்தவுடனே உங்களை எண்ணிக் கணக்குப் பார்த்த வகையிலே மாறுபாடு வந்தது. தன்னையாயினும் வேறொருவனையாயினும் தப்பவிட்டெண்ணினால் கணக்கு தப்புத்தான். ஆனாலும் போனது போகட்டும். இனி வேறெந்த நேரத்திலாவது இப்படிப்பட்ட துன்பம் வராதபடி உங்களுக்கு நலமாய்ச் சுளுவாய் நான் ஒரு வழி சொல்லுகிறேன். கூர்ந்து கேளுங்கள்.

"காட்டிலே முட்டை முட்டையாய்க் கிடக்கிற காலி மாட்டுச் சாணத்தைப் பொறுக்கி எடுத்து வாருங்கள்; நன்றாய்ப் பிசைந்து கூட்டுங்கள்; அதை அடை போலத் தட்டுங்கள்: பின்பு எல்லோரும் உருளைபோல வட்டமாய் அதைச் சுற்றியிருங்கள்; நுனி மூக்குச் சாணத்திற்படக் குனிந்து அழுத்தி நிமிர்ந்து, உடனே சாணியில் இருக்கிற குழிகளை எண்ணினால் கணக்குத் தப்பாமல் இத்தனை பேரென்று வெகு சுளுவாய் அறியலாமே; கேளுங்கள்; அறுபது எழுபது ஆண்டுகளுக்குமுன்பே பத்துப் பெண்கள் கூடிக் கணக்குப் பார்த்தவகை இதுவே. இஃதறியாமல் ஏன் வீணாகத் துன்பமுற இருப்புத் தடியடி பட்டுக்

கொண்டதன்றி நாற்பத்தைந்து பணமும் இழந்தீர்கள்," என்றாள்.



வேலைக்காரி களுக்குத் தெரிய வழி சொல்லுதல்

குருவுக்குக் குதிரைவாங்க எண்ணுதல்

அவர்கள் "அது நல்ல வழிதான்; பணத்துக்கும் செலவில்லை; நமக்குள் ஒருவனுக்கும் இது தோன்றாமல் போயிற்றே:" என்று வருத்தமுற்று, பின்பு அவர்கள் அனைவரும் ஒன்றுகூடி "எல்லாக் காரியத்துக்கும் ஒரு குதிரை வாங்கினால் மேலானது ஐயா! எப்படியாயினும் உமக்குக் குதிரை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று

எங்களுக்கு விருப்பமாக இருக்கிறது," என்று தம் குருவினிடம் சொன்னார்கள். அதற்கு குரு "ஒரு குதிரையின் விலை எவ்வளவாக இருக்கும்," என்று கேட்டார். "நூறுபொன் அல்லது ஐம்பது பொன்னிற்குக் குறையாது," என்று அவர்கள் சொன்னார்கள். "அவ்வளவிற்கு இடமில்லை," என்று குருவானவர் சொன்னார். இவ்வாறு இவர்கள் பலநாளும் எண்ணமிட லாயினர்.

இது நிற்க, அவர்கள் மேயவிட்ட கறவைப்பசு, ஒருநாள்பொழுதுசாயும் வேளையிலும் மடத்துக்கு வரவில்லை. அவர்கள் அதை ஊரெங்கும் போய்த் தேடினார்கள். தேடின இடங்களில் எல்லாம் அஃது அகப்படாததினால் மறுநாள் மட்டி என்பவன் பக்கத்து ஊர்களிலே தேடப்போனான். அன்றுமுதல் அவன் மூன்று நாட்கள் வரையில் தேடி, அவ் ஆவை எங்கும் காணாமல் மடத்துக்குவந்து சேர்ந்தான்; அவன் ஐயா! ஆவைக் காணேன்; ஆயினும் அதுபோனது பெரிதன்று; குறைந்த விலையில் குதிரை அகப்பட்டது," என்று மகிழ்வுடன் கூறினான்.

மட்டி குதிரைமுட்டை கண்ட வியப்பு

"அஃதெப்படி?" என்று குருவும் விருப்புடன் கேட்டார்; மட்டி, "ஐயா! காணாமற்போன கறவை ஆவைத் தேட, ஊருக்கு ஊர், வனத்துக்கு வனம், கொல்லைக்குக் கொல்லை போய் எல்லாம் ஆராய்ந்து பார்த்து வந்தேன். அவ் வேளை அடிகளுடைய கடைக்கண் பார்வை அருளாலும், இறைவன் திருவருளாலும் ஒரு பெரிய ஏரிக்கரைச் சார்பிலே நாலைந்து கோளிகைக் குதிரை (பெட்டைக் கழுதை)கள் மேயவும் படுத்திருக்கவும் கண்டேன். அருகே போகப் போக நான் எந்த நாளும் காணாதவைகளும் இருகைகட்கும் அடங்காதவை

களுமாகிய குதிரைமுட்டைகளைக் கண்டேன். பின்பு 'இவைகள் என்ன? குதிரை முட்டைகள் அல்லவோ?'' என்று ஐயப்பட்டு, அங்கே வந்த ஒருவனைக் கேட்டேன். அவன் அவைகளைக் குதிரை முட்டைகளே என்றும் ஒவ்வொன்றின் விலை மிகுதியில்லை, நாலைந்து பொன் மட்டும்தான் என்றும் எனக்குச் சொன்னான். ஐயா! இது நல்லவேளை; அண்மையில் நல்ல உயர் குதிரைகள் கிடைக்கின்றன. நாம் எப்படிப் பழக்குகின்றோமோ அப்படியெல்லாம் அவைகள் எளிதாக இணங்கத் தக்க தாகும்,'' என்று சொன்னான்.

எல்லோரும் அதற்கு ஒத்துக்கொண்டனர். பின்பு மடையன் என்பவனை அவனோடே கூட்டி அவன் கையில் ஐந்து பொன் கொடுத்துக் காலங்கடவாமல் உடனே அவர்களை வழியனுப்பினார்கள்.

மட்டியும் மடையனும் குதிரைமுட்டை வாங்கப் போதல்
மூடன் அதை அடைகாக்க ஆளமைத்தல்

முன் சொன்னவாறு மட்டியும் மடையனும் குதிரைமுட்டை வாங்கப் புறப்பட்டுப் போயினர். பிறகு மூடனென்பவன் தன் மனதில் ஓர் ஐயத்தை நினைத்துக்கொண்டு மூர்க்கனையும், மிலேச்சனையும், குருவையும் பார்த்து "கேட்டீர்களா? ஒரு செய்தி. மட்டியும், மடையனும் போயிருக்கிறபடியால் கட்டா யம் தடையில்லாமல் நல்ல சாதிக் குதிரைமுட்டை வரு மென்று வைத்துக்கொள்வோம்: வந்தால் அடைகாத்த பின்பன்றோ அம் முட்டை, செவ்வைப் படும்? அதன் பின்பல்லவா குதிரைக் குட்டியைக் காணக்கூடும்? ஆனாலும் அதை யார் அடைகாக்கிறது? அப்பா! எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே! அது இருகைக்கும் அடங்

காத அத்தனை பெரிதாய் இருக்கிற தென்றானே, பத்துப்பதினைந்து கோழிகளை வைத்தாலும் போதா; அவைகள் நிற்கவும் மாட்டா; அப்புறம் ஆகும் வழி யென்ன சொல்லுங்கள்," என்றான்.

அவன் இவ்வாறு சொல்லக் கேட்டனர்; எல்லோ ரும் மிக விழிப்பாட்டமாய் ஒருவரையொருவர் பார்த்த னர்; வகை தெரியாமல் வாய்விட்டுப் பேசாமல் மௌன மாக இருந்தார்கள். நெடுநேரம் சென்றது. பின்பு குருவானவர், "நமக்குள்ளே யாராயினும் ஒருவன் அடைக்காத்தாலொழிய வேறு வழியைக் காணேமே," என்று எதிரே இருந்த மூவரையும் தனித்தனியே கேட்டார். அதற்கு அவரவர் ஒவ்வொரு போக்குச் சொல்லத் தலைப்பட்டார்கள்.

முதலாவதாக, மூடன் "நாள்தோறும் ஆற்றுக்குப் போய்த் தண்ணீரெல்லாம் கொண்டுவருகிறேன்; காட்டுக்குப் போய் எரிதுரும்பு ஈட்டிக் கொடுக்கிறேன், இவை எனக்கு வேலையாயிருக்க நான் அடைகாக்கக் கூடுமோ." என்றான்.

இரண்டாவதாக, மூர்க்கன் "நான் இரவும் பகலு மாகப் பின்வாங்காமல் மடைப் பள்ளியில் பத்துப்பேருக் குச் சோறும் பலவகைக் கறிகளும் சமைக்கிறேன்; வியக் கும்படியான பலகாரங்கள் பண்ணுகிறேன்; வெந்நீர் வைக்கிறேன்; அடுப்பண்டையிலேயே கிடந்து உழைத் துக்கொண்டு சாகிறேனல்லவோ? ஆதலால் அடைகாக்கி றதற்கு என்னால் ஆகுமா," என்றான்.

மூன்றாவதாக, மிலேச்சன், "விடியுமுன் எழுந்திருக் கிறேன்; ஆற்றுக்குப்போய்ப் பல்விளக்கி வாய் கொப்ப

ளித்து முகங்கழுவித் தூயதாக்கிக் கடவுள் வழிபாடு செய்துவருகிறேன்; பிறகு, நந்தவனங்களிற் புகுந்து, நாள ரும்புகள் எடுத்து வெவ்வேறு வகையாய்த் தொடுத்து, கடவுள் திருவுருவங்கட்குச் சாத்தி நறும்புகையும் விளக்கும் காட்டிக் கடவுள் வழிபாடு செய்தற்கு வேண்டிய உதவி செய்கிறேன். இது என் வேலையாக இருப்பதனால் நான் எப்படி அடைகாப்பேன்," என்றான்

முட்டையை அடைகாக்கக் குரு ஒப்புக்கொள்ளுதல்

அதற்குக் குருவானவர் "இதெல்லாம் உள்ளவை தானே; முட்டை வாங்கப்போன மற்றிரண்டு பேர்க ளாலேயும் ஆகாது; அவர்களில் மடையனுக்கு வரு கிற போகிறவர்களை உசாவியறியவும், அவர்கள் சொல் பவைகட்கு மறுமொழி கூறவும், பல பேர்கள் கொண்டு வருகிற வழக்குகளைக் கேட்டறிந்து முடிவு கூறவும் எந் நேரமும் தீராத வேலையாக இருக்கிறது. முடிவில் மட்டி யென்பவன் எதற்காவது ஏவினபோது கடைக்கோ சந் தைக்கோ பேட்டைக்கோ போகின்றவன் அல்லவா? ஆகையால் உங்களுக்குள் ஒருவருக்கும் ஓய்வில்லை. நான் மட்டுந்தான் இங்கே சும்மா இருக்கிறேன். ஆதலால் நான் அந்த முட்டையை மடியிலே வைத்துக்கொண்டு கையாலே தழுவிப் போர்வையாலே மூடி மார்போ டணைத்து அன்போடு பேணிக் கண்ணும் கருத்துமா யிருந்து அதை இடைவிடாது ஊன்றி நிற்கப் பாது காப்பாய் அடைகாக்கிறதைவிட எனக்கு வேறே வேலை யென்ன? முட்டை நிறைவளர்ச்சியுற்றுக் குதிரை யைக் கண்டடைந்தால் அதுவே போதும்! படத்தக்க கடுவுழைப்பெல்லாம் பார்க்கக் கூடாது," என்றார்.

மட்டியும் மடையனும் குதிரைமுட்டை வாங்கிய வியப்பு

இந்தச் சூழ்ச்சியெல்லாம் மடத்திலே நடந்துகொண்டிருந்தன. இரவு மூன்றும் யாமத்தில் நிலவு எழுந்தது. அந் நிலவொளியில் மட்டியும் மடையனும் புறப்பட்டனர். அவர்கள் இருவரும் இரண்டரைக்காத வழி கடந்து சென்றனர்; முன் கண்டு குறித்த அடையாளமான இடத்துக்குப் போய்ச்சேர்ந்தனர். அங்கு சாம்பற் பூசணிக்காய்கள் திரள் திரளாகக் காய்த்துக் கிடந்த ஏரிக்கரையைக் கிட்டினார்கள். அங்கு கிடந்த பூசணிக் காய்களைக் கண்டு மிகவும் களிகூர்ந்தனர்; அங்கிருந்த



குதிரை முட்டை வாங்குதல்

குடியானவன் ஒருவன் அருகிற் சென்றனர்; சென்றவுடன் "அப்பா! இந்தக் குதிரைமுட்டைகளில் எங்களுக்கு ஒரு முட்டை கட்டாயம் விலைக்குத் தரவேண்

டும்,'' என்று கெஞ்சிக் கேட்டார்கள். அவன் இவர்கள் மூடச்செயல்களைக் கண்டுகொண்டான்; "ஓ! ஓ! இந்த உயர்ந்த சாதிக் குதிரைமுட்டையை நீங்கள் விலை கொடுத்து வாங்கத் தக்கவர்களா? இது மிகுவிலை பெற்றதாகும்,'' என்றான்.

அதற்கு அவர்கள் "போமையா போம்! இதற்கு ஐந்து பணம்தானே உள்ள விலை; நாங்கள் என்ன அறியோமா? எங்களுக்குத் தெரியாததுபோல் நீர் ஏன் சும்மா உயர்த்தி உயர்த்திப் பாடுகிறீர்? இதோ ஐந்து பணத்தையும் கைம் மேலே வாங்கிக்கொண்டு நல்ல முட்டையாய் ஒன்று தாருமையா,'' என்றார்கள்.

அதற்கு அந்தப் பயிரிடும் குடியானவன், "நீங்கள் நல்ல குடும்பத்தினர் என்று தெரியவருகிறது; உங்கள் நற்குணத்தைக்கண்டு இந்த விலைக்குக் கொடுக்க ஒத்துக் கொள்கிறேன். நல்லது! உங்களுக்கு விருப்பமான ஒரு முட்டையைத் தெரிந்தெடுத்துக்கொண்டு செல்லுங்கள்; இவ்வளவு மலிவாய் வாங்கின விலையை மட்டும் ஒருவரிடத்திலும் வெளியிடாதிருங்கள்,'' என்றான்.

அவர்கள் "அதைப்பற்றி எங்களுக்கு ஆகவேண்டியது என்ன? அப்படியே வெளிப்படுத்தவில்லை,'' என்று கூறினார்கள். பின் தங்கள் மனதுக்கு ஏற்றவாறு எல்லாவற்றினும் பெரிதாகவுள்ள ஒரு காயைத் தேடித் தெரிந்தெடுத்துக்கொண்டனர். மறுநாள் விடியற்காலையில் பல பல என்று பொழுது விடியுமுன் சிற்றிருட்டிலேயே எழுந்தனர்; அப்போது மடையன் மட்டி தலைமேல் அம்முட்டையை எடுத்து மெல்லவைத்து வழி காட்டிக்கொண்டு முன்னே போனான். அப்போது மட்டி

அம் முட்டையைக் காணுமல் கண்டதாக வியந்து சொல்லத் தொடங்கினுன்.

மட்டி மடையன் இருவரும் தங்களைப் புகழ்தல்

"ஆ! ஆ! பெரியோர்கள் தவ வலிமையால் அரிய பெரிய செயல்கள் எல்லாங் கைகூடும் என்பார்கள்; அதற்குச் சான்று இப்பொழுது நேரே கண்டோம்! நம்முடைய குருத்தலைவர் செய்துவருகிற தவ ஆற்றல் இதுதான். நூறுபொன் நூற்றைம்பது பொன் பெறத்தக்கவான சாதிக்குதிரை முட்டைகளை, மாயப்பொடி தூவிப் பறித்துக்கொண்டு போகிறது போல, நாம் எவ்வளவு எளிமையாக ஐந்து பொன்னுக்கு வாங்கிக்கொண்டு வருகிறோம் பார்," என்ருன்.

அதற்கு மடையன் "இதிலே எண்ணமிடவேண்டியது என்ன? 'பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்' என்று சொல்வதை நீ கேட்கவில்லையா? நம் குருவானவர், உள்ளபடியே அறப்பண்பினர் என்பது அவருக்கு இப்பொழுது கிடைத்த இந்தக் குதிரையின் அளவிலேயே 'உள்ளங்கை நெல்லிக் கனிபோல்' தெரிகிறது. இன்னும் ஓர் எடுத்துக்காட்டு, என் தந்தை சிறந்த நல்லோன் என்றும் யோகசாலி யென்றும் பெயர் பெற்றது நான் கண்ணன் வடிவம்போல் பிள்ளையாகப் பிறந்த பெரும் பேறலன்றோ? அதனுலல்லவா அவர் பெரு மகிழ்ச்சியடைந்தார்," என்று சொன்னுன். மட்டியானவன் அதற்கு "அதைக் குறித்தும் ஐயமா? 'விரையொன்று போடச் சுரையொன்று காய்க்குமா'? 'ஆமணக்கு விதைத்தால் ஆச்சா முளைக்குமா?' 'நல்வினை நன்மையைத்தான் தரும்; தீவினை தீமையைத்தான் தரும்.' 'நன்மை விளைத்தால் நன்மை விளையும்; தீமை விதைத்

தால் தீமை விளையும்' 'நன்மையும் தீமையும் பின்வரக் காணலாம்' என்னும் ஆன்றோர் உரைகளும் இருக்கின்றன அல்லவா?" என்றான்,

குதிரைக்குட்டி வெளிப்பட்ட வியப்பு

இப்படி அவர்கள் மகிழ்வுடன் பேசிக்கொண்டே நெடுந்தூரம் நடந்து சென்றார்கள். பின்பு அவர்கள் இடுக்கு வழியிற் சென்றார்கள்; அவ்வழி ஓரத்தில் சாய்ந்திருந்த ஒரு மரக்கொம்பு குறுக்கே பட்டது; மட்டியின் தலையில் இருந்த சாம்பற் பூசணிக்காய் தவறிக் கீழே நெருங்கிய புதரின்மேல் விழுந்தது; அதன் நடுவிற் கிடந்த கல்லின்மேல் மிகக் கடுமையாய்த் தாக்கித் தகர்ந்து உடைந்தது. அப்போது அந்தப் புதரில் பதுங்கியிருந்த முயல் ஒன்று அதிர்ச்சிகேட்டு அஞ்சி எழுந்து ஓடியது.

அதுகண்டு "இதோ முட்டைக்குள் இருந்த குட்டிப் பரி ஓடுகிறது," என்று கூக்குரல் இட்டுக்கொண்டு மட்டி, மடையனாகிய இருவரும் அதைப்பிடிக்கப் பின்தொடர்ந்தார்கள். இவர்கள் காடுஞ்செடியும் கடந்தனர்; மேடும் பள்ளமும் தாண்டினர்; கல்லும் கரடும், முள்ளும், முரடும் பாராமல் ஓடினார்கள்; அதனால் உடுத்த ஆடை செடிகளிலே மாட்டிக் கிழிந்து கயிறு கயிறாகத் தொங்கின. முட்கள் முதுகைக் கிழித்தன; கற்கள் காலில் உறுத்தின; உடம்பெல்லாம் காயம் பட்டன; செந்நீர் பீறிட்டுப் பாய்ந்தது; ஊற்றிலிருந்து நீர் வெளிப்படுவதுபோல வேர்வை வடிந்தது; நெஞ்சு பதைத்தது; காதடைக்க, நாக்கு வறள, நீர் வேட்கைமிக, குடல் குழம்ப இரைப்பெடுக்க, பெருமூச்சுவாங்க ஓடினர்; ஆயினும் அம்முயல் அகப்பட

வில்லை. அவர்கள் தவித்துத் தடுக்கிக் கீழே விழுந்தார்கள். இதற்குள் முயல் கண்ணினுற் காணக்கூடாத அளவு தூரம் ஓடி மறைந்துபோய்விட்டது. அவர்களும் இளைப்பைப் பார்க்காமல் எழுந்தார்கள். கல்லும் முள்ளும் தைத்த காலால் நொண்டி நொண்டி நடந்தனர். அங்கங்கே அதைத் தேடிச் சலித்துப் போயினர். அன்றைக்கெல்லாம்சோறும் நீருமின்றிப் பசியுடன் பட்டினி கிடந்து அலைந்து பொழுதடைந்தபின் மடத்துக்குச் சென்றார்கள்.

பரி முட்டையைப் பறிகொடுத்த மட்டி மடையர்களும், குருவும்

பின்பு அவர்கள் மடத்து வாசலில் நுழைந்தார்கள்; அப்போது அவர்கள், "அட அப்பா! அட அப்பா! குதிரைமுட்டை வாங்கப்போன ஊதியம் திரும்பிவிட்டதப்பா!" என்றுகூறி வாயிலும்வயிற்றிலும் மோதியடித்துக்கொண்டார்கள்; கீழே விழுந்தார்கள். உள்ளே இருந்தவர்கள் துணுக்குற்று ஓடிவந்தார்கள்; அவர்களைக் கைதூக்கி எடுத்தார்கள்; தண்ணீர் கொடுத்தார்கள்; மயக்கத்தைத் தெளிவித்தார்கள். பின் "என்ன துன்பம் வந்தது," என்று கேட்டனர். அவர்கள் இருவரும் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் விடாமல் விளக்கமாகச் சொன்னார்கள்.

பிறகு மட்டியென்பவன் தனக்குள்ளே வியப்புற்று மற்றவர்களுடனே, "ஐயா! விரைவாக ஓடும் குதிரையை நான் ஒரு நாளும் கண்டதே இல்லை. அது கறுப்புப் பாய்ந்த சாம்பல் நிறமாய் இருந்தது; உயரத்திலும் பருமனிலும் முயலை ஒத்தது; ஒருமுழ நீளமுள்ளது; இன்னும் முட்டைக்குள் கிடக்கும் குட்டியாகவே அது இருந்தது, ஆயினும் அது தன் இரு காதுகளையும்

விரித்துக்கொண்டு இரண்டு விரற்கடை நீளமுள்ள குறுகிய வாலைத் தூக்கி மார்பு நிலத்திலே பட நான்கு கால்களையும் விரித்து நீட்டி, ஓடின கடுவிரைவை நான் எப்படிச் சொல்லுவேன்? சொல்ல வாயெடுத்தால் கையும் காலும் நடுங்குகின்றன; வாய் கூசுகின்றது," என்றான்.

அவர்களெல்லாம் அதைக்கேட்டு வருத்தப்பட்டு அழுதுகொண்டிருந்தனர். குருவானவர் அவர்களைப் பார்த்துக் கையமர்த்தி, "கூண்டோடே போயிற்றுக் குளிரும் காய்ச்சலும்," என்றது போல, ஐந்து பொன் போனதன்றி, அதனோடு குதிரைக் குட்டியும் போய்விட்டதே! அது தேவை இல்லைதான்! சிறு குட்டியாய் இருக்கும் போதே இவ்வளவு கடுமையாய் ஓட்டம் பிடித்தால், இனிமேல் அது வளர்ந்து பெரியதாகிறபோது, எப்படிப் பறக்கமாட்டாது? அச்சமில்லாமல் அதன்மேல் யார் ஏறி இருக்கப் போகிறார்கள்? அப்பா! நான் கிழவனாயிற்றே. அப்படிப்பட்ட காற்றுப்போன்ற விரைவாகச் செல்லும் குதிரை நமக்குப் பணச்செலவில்லாமல் சும்மா நன்கொடையாக வந்தாலும் எனக்கு வேண்டாம்! வேண்டாம்!!" என்றார்.

ந. வாடகை மாட்டில் ஏறிப்போதல்


குரு பட்டபாடு

பல நாட்கள் சென்ற பின்பு நெடுந்தொலைவு வரை சென்று வரவேண்டுமென்று குருவுக்கு ஓர் விரைந்த எண்ணம் உண்டாயிற்று. அவருடைய மாணவர்கள், "நம்முடைய குருவானவர் கிழவராகையால் கால் நடையாக அவ்வளவு தூரம் போகமுடியாது. அது மிகக் கடுமையான செயல்," என்றுகருதி ஒரு மோழை மாட்டைக் கூலிக்கு அமர்த்திக் கொண்டுவந்தனர். அதற்கு நாளொன்றுக்குக் கூலி மூன்று பணம் கொடுப்பதாக முடிவு செய்தார்கள். பல வேலையால் இராப்பொழுது கழிந்தபின் குருவும் மாணவர்களும் நெடுந்தொலைவு செல்லப் புறப்பட்டுப் போனார்கள்.

அப்போது கடுவேனிலாகிய கோடைக்காலம். ஆகையால், அவர்கள் நடக்க நடக்கக் கொள்ளிகொண்டு சுடுவதுபோலச் சுள்ளுச் சுள்ளென வெயிலெறித்தது. பின்பு அவர்கள் எல்லோரும் மரம் மட்டை, குளம் குட்டை இல்லாமலும், உண்ண நீரும், ஒதுங்க நிழலும் அற்றதும், வெட்ட வெளியுமாகிய ஒரு பாலை நிலத்தில் அகப்பட்டுக்கொண்டார்கள். அவ்வழியே போகப் போகக் கிழவரான குருவினால் கொடுமையும் கடுமையுமான வெயிலின் வெப்பம் பொறுக்க முடியவில்லை; அவர் பசியால் இளங் கீரைத்தண்டுபோல் துவண்டு கீழே விழத்தலைப்பட்டார்.

அதைக்கண்ட மாணவர்கள் மாட்டை நிறுத்தி அவரைக் கீழே இறக்கினார்கள். அவர் வெப்பத்தை ஆற்றுதற்கு முயன்றார்கள். நிழல் எங்குமே இல்லை.

நிறுத்தப்பட்ட மாட்டின் நிழலே இருந்தது. அந்நிழ லுள்ள தரையின்மேல் துணியை விரித்துப்போட்டு அதில் அவரைப் படுக்கச் செய்தார்கள். விசிறி இல்லாத



குரு, வெயிலுக்காக மாட்டின் நிழலிற் படுத்தல்

தால் துணிகளினால் விசிறிக்கொண்டிருந்தார்கள். அவருக்கு அதிலே சிறிது ஆறுதல் உண்டாயிற்று. பிறகு குளிர்ந்த காற்று வீசிற்று. மறுபடியும் இவர்கள் தம் குருவை மாட்டின்மேல் ஏற்றினார்கள். மெல்ல மெல்ல நடத்திக்கொண்டு போனார்கள். பொழுது போகுமுன்னே ஒரு சிற்றூரில் சென்று இறங்கினார்கள். அங்கே ஒரு சிறிய வீட்டின் நடையிற்போய் இருப்ப தற்கு வாசலுக்குள் நுழைந்தவுடனே மாட்டுக்கார னுக்கு மூன்று பணத்தை எடுத்துக் கொடுத்தார்கள்.

மாட்டுக்கு உரியோன் கூலிகேட்ட வியப்பு

அஃது "போதாது," என்றான் அவன்.

"இஃதென்ன? முன் உன்னோடே பேசி ஏற்றுக் கொண்ட நாட்கூலி மூன்று பணந்தானே," என்று அவர்கள் கேட்டார்கள்.

அவன் மறுத்து "மாடு ஊர்தியாக மேலே ஏறிப் போவதற்காக இந்தக் கூலி சரிதான். பிறகு நடுவழியில் வெயிலுக்குக் குடையாக உதவினதற்குக் கூலி கொடுக்க வேண்டாமா?" என்று கூச்சல் போட்டான்.

அவர்கள் "இது முறையற்றது, முறையற்றது," என்று சினந்து கடுமையாகப் பேசினார்கள்.

அப்பால் மாட்டுக்குரியோனுக்கும் அவர்களுக்கும் சண்டையாகிப் பேரிரைச்சல் உண்டாயிற்று. அதை அந்த ஊரார் அறிந்தனர். ஆண் பெண் பெரியோர் சிறியோரெல்லாரும் அங்கே ஒரு கூட்டமாகக் கூடி மொய்த்துவிட்டார்கள்.

நடுநிலையோன் தீர்ப்புக் கூறல்

அவர்களுள் நடுநிலையாளன் ஒருவன் அந்தக் கூச்சலை விலக்கி இருதிறத்தவர் வழக்கையும் கேட்டறிந்து "நல்லது, நான் சொல்கிற தீர்ப்புக்கு உள்ளாவீர்களோ? உங்களுக்கு ஒத்ததுதானா? சொல்லுங்கள்," என்றான்.

அவர்கள் சரியென ஒத்துக்கொண்டார்கள். அவன் தீர்ப்புச் சொல்லத் தொடங்கினான் :—

நான் சில நாட்களுக்குமுன் வெளிநாட்டுக்குப் புறப் பட்டுச் செல்கையில் நடுவழியிலே ஓர் ஊரில் ஒரு பெரிய விடுதியில் தங்கினேன். அங்கே வந்தவர்களுக்கெல் லாம் இருக்க இடம் குடிக்கூலிக்கு விடுவார்கள்; உண்ண

வேண்டிய சோறு கறி முதலானவைகளும் விலைக்குத் தருவார்கள். ஆகையால் 'உனக்கு ஏதாவது வேண்டுமா ?,' என்று என்னை அவர்கள் கேட்டார்கள். 'எனக்குச் செலவுக்குப் பணமில்லாமையால் நான் கட்டுச் சோறு கட்டிக்கொண்டு வந்திருக்கிறேன்; வேறொன்றும் தேவை இல்லை,' என்றேன்.

அப்போது அங்கு வந்து தங்கிய மற்றவர்களுக்கு ஒரு பெரிய ஆட்டுத் தொடையை ஓர் இருப்புக்கம்பியில் கோத்து நெய்தடவி நெருப்பின்மேற் காட்டி, பதமாகச் சுழற்றிச் சுட்டுக்கொண்டிருந்தார்கள். அது சிவக்க வேக வேக அதில் தடவிய நெய் உருகி நெருப்பில் துளி துளியாக விழுந்து புகையத் தலைப்பட்டது. அப்பொழுது மிக மன நிறைவாகவும் மிக மணமுள்ளதாகவும் இருந்தது. நான் கொண்டுபோன கட்டுச் சோற்றை அந்த மணத்தோடே உண்பது நல்லதென்று நினைத்தேன். அதை அப்படியே சற்று நேரம் சுழற்றி அதை வாட்டிக் கொண்டிருக்கும்படி அவர்களை வேண்டினேன். அவர்கள் அவ்வாறே அதைச் சுழற்றி வாட்டிக்கொண்டிருந்தார்கள்; நான் சோற்றை அவிழ்த்தெடுத்தேன்; அதைக் கட்டியிருந்த துணியோடு ஒரு கையால் அந்தப் புகையின்மேற் பிடித்தேன்; மற்றொரு கையால் விரைவில் சோற்றை அள்ளி அள்ளி அந்த மணத்திலேயே இன்பமாக உண்டேன். பிறகு, நான் வெளியே போக வேண்டுமென்றிருக்கையில் அவ் விடுதிக்குரியோன் மணத்தை மோந்ததற்காகக் கூலிகேட்டான்.

நான் ' அதற்கேது கூலி ?' என்றேன்.

அவன் 'நீ கொடுக்கவேண்டும்,' என்றான்.

நான் ' கொடுக்கிறதில்லை 'யென்று எழுந்து நடந்தேன்.

அவன் 'நீ கொடாமற் போகக்கூடாது,' என்று ஆணை இட்டுத் தடுத்தான்.

இந்தப்படி இருவரும் வழக்கிட்டு முடிவில் அந்த ஊர்த் தலைவரிடம் வழக்குக் கூறப்போனோம். அவனோ நிறைந்த அறிஞன், எல்லாக் கலையிலும் வல்லுநன்; மிக்க உலகியல் அறிஞன்; மிகவும் ஆற்றல் உள்ளவன்; நன்கு வழக்குகளின் நுட்பம் தெரிந்தவன்; அச் சிறந்தோன் செய்த வழக்குத் தீர்ப்பைக் கேளுங்கள் ;—

"கறி தின்றதற்கு விலை பணமும், கறி மணம் மோந்ததற்கு விலை பணத்தின் மணமும் ஆகும். இது தான் தீர்ப்பு," என்று, அவ் விடுதிக் குரியானை அருகே அழைத்தான்; பணம் நிறைந்த பையை எடுத்தான்; அவன் மூக்கில் அழுந்த உறைத்துத் தேய்த்தான்.

உடனே அவன், "மூக்குப் போயிற்று! ஐயா! மூக்குப் போயிற்று! இந்த மட்டில் வந்த கூலிபோதும்! போதும்," என்றான்.

"பார்த்தீர்களா! இதுவே நல்ல முறையும் சிறந்த தீர்ப்பும் ஆகும், இந்தத் தீர்ப்புத்தான் உங்களுக்கும். எப்படி என்றால், மாட்டில் ஏறிவந்ததற்குக் கூலி பணமும், மாட்டின் நிழலில் இருந்ததற்குக் கூலி பணத்தின் நிழலும்போதுமானவை. ஆனாலும் அந்தப்பொழுது போய்விட்டபடியால், மாட்டுநிழற் கூலிக்குப் பணநிழல் அகப்படாது; அதற்குப் பதிலாக பணத்தின் ஒலியை ஒத்துக்கொள்," என்று சொல்லி, அவனைச் சிக்கெனப் பிடித்துப் பணப்பையைத் தூக்கி அவன் காதிலே உரமாகத் தாக்கும்படி அதனால் மோதியடித்துப் 'பணத்தின் ஒலியைக் கேட்டாயா?' என்றான்.

அவனும் "ஆம் ஐயா! ஆம் ஐயா!! கேட்டேன், கேட்டேன்; காது நோகிறது, போதும் கூலி, போதும் அப்பா! உனக்குப் புண்ணியமாய்ப் போகிறது, என்னை விட்டுவிடு," என்றான்.



நடுநிலையாளன் மாட்டின் வழக்குத் தீர்த்தல்

அவ் வேளையில் அவனைப் பார்த்துக் குருவும் "உன் மாடு எனக்குப் போதும்; மனத்துன்பம் இனி ஆகாது; நீ மாட்டை ஓட்டிக்கொண்டுபோ. நாங்கள் இன்னும் சிறிது தொலைவுதான் வழிச் செல்லவேண்டும்; காலையில் மெல்ல மெல்ல நடந்து போகின்றோம்," என்று அவனைப் போகச் சொன்னார். பிறகு அவர் நடு நிலைமையாளனைப் பார்த்து, "ஐயா! எங்களுக்கு ஒருதலைச் சார்பின்றி எள்ளுக்காய் பிளந்தாற்போலச் சரியாய் வழக்குத் தீர்த்தீர்," என்று அவனைப் புகழ்ந்து நல் வாழ்த்துச் செய்தனுப்பினார்.

௩. குதிரை பிடிக்கத் தூண்டில் போடுதல்

மண்குதிரையின் நிழலைக்கண்டு மயங்கல்

மறுநாள் குருவும் மாணவரும் வெயிலுக்கு அஞ்சிக் கோழி கூவினவுடனே எழுந்து வழிச் செல்ல ஆயத்தஞ் செய்து புறப்பட்டனர். அவர்கள் தளர்ந்த நடையாய் நடந்து போனார்கள்; அதனால் காதவழிகூட அதுவரை நடவாததற்குள் வெயில் ஏறிவிட்டது; அதனால் அங்கு ஒரு குளிர்ச்சியான சோலையில் தங்கினார்கள். அங்கு அவர்கள் இளைப்பாறிக் கொண்டிருக்கையில்—மிலேச்சன் என்பவன் பக்கத்தில் இருந்த ஓர் ஏரியிற் கால் கழுவப் போனான்.

அந்த ஏரியின் கரைமேல் ஓர் ஐயனார் கோயில் இருந்தது. யாரோ ஐயனாரைக் குறித்து நேர்ந்து கொண்டவர்கள் மண்ணினாற் புதிதாகச் செய்து சுட்டு வண்ணம் தீட்டிய ஒரு பெரிய குதிரையைக் கொண்டு வந்து செலுத்தியிருந்தார்கள். அக் குதிரையின் வடிவம் ஏரிநிறையத் தெளிந்து கிடக்கின்ற தண்ணீரில் தெரிந்தது. அவ் வேரியில் கால்அலம்பப்போன மிலேச்சன், அதைக் கண்டு நீருக்குள் குதிரை நிற்கிறதென்று நினைத்து வியப்புற்றான். பின்பு அது கரையிலே நிற்கும் மண்குதிரைக்குச் சரியொத்த நிறமும் உயரமும் பருமனும் சாயலும் இருக்கக் கண்டதனால், தண்ணீரிலே தோன்றியது, அதன் நிழலாயிருக்க வேண்டுமென்று ஐயப்பட்டான்.

அவ்வாறு ஐயப்பட்டாலும், அப்போது அடித்த காற்றினால் தண்ணீர் அசைய, அதிலே தெரிந்த குதிரை நிழலும் அசையத் தலைப்பட்டது. அவன் அதையும்

பார்த்தான்; கரைமேல் இருக்கும் குதிரையையும் பார்த்தான்; அஃது அசைவொன்றும் இல்லாதிருந்தது. அதனால் நீருக்குள் நிற்கும் குதிரை வேறென்றும் அஃது உயிருள்ளதென்றும் முடிவுகட்டினான். பின் அவன் அதை ஓட்டுவதற்கு முயற்சி செய்து வாயினால் கூச்சல் போட்டான்; கல்லைக் கொண்டெறிந்தான். எறிந்தவுடனே தண்ணீர் மிகுதியாக ஆடி அசைந்து அலைத்தெழும்பியது; அவ்வலைப்பினால், குதிரையும் தலையெடுத்துக் கால் உதறி, உடல் துளித்துத் துள்ளினதாக இவன் கண்ணுக்குத் தோன்றிற்று. அவன் அஞ்சினான்; கால் அலம்பாமல் மற்றவர்களிடத்தில் ஓடிவந்தான்; தான் கண்டதையெல்லாம் சொன்னான்.

குதிரை பிடிக்கத் தூண்டில் போட என்னுதல்

அந்தப் புதுமையைக் கேட்டு எல்லோரும் திடீரென்று எழுந்து ஓடினர்; ஓடிப்போய் ஏரிக்குள்ளே சுற்றிப் பார்த்தனர். பின்பு மிலேச்சன் சொன்னது மெய்யென்று நம்பினர். அவர்கள் 'தண்ணீரில் இறங்கினால் தவளை கடிக்கும்' என்பவர்களைப்போல், அவர்கள் ஏரி நீரில் இறங்க அஞ்சினர். அந்நீரில் இறங்காமலே அதற்குள் இருக்கிற குதிரையைப் பிடிப்பதற்குச் சூழ்ச்சி செய்யத் தொடங்கினார்கள்.

அவர்களில் ஒருவன் "கொள்ளைக் கண்டால் வாயைத் திறப்பது குதிரையின் இயற்கைக் குணம். ஆகையால் கொள்ளினை வேவவைத்து வைத்தால் அந்த மணத்தைத் தெரிந்து அதைத் தின்பதற்குக் குதிரை மேலே வரும். அப்போது அதை எளிதாகப் பிடித்துக் கொள்ளலாம்," என்றான்.

மற்றொருவன் "பசுமையாயிருக்கிற ஒரு பிடி அறுகம்புல்லைப் பறித்துக்கொண்டுபோய்த் தண்ணீருக்கு மேலே காட்டினால், குதிரை அதைத் தின்னத் தாவி எழும்பும், அந்நேரத்தில் அதைப் பிடித்துக்கொள்ளலாம்," என்றான்.

பின்னொருவன் "குதிரை கனைக்கிறதுபோலக் கரைமேல் இருந்தபடி கனைத்தால் குதிரை மேலே கிளம்பும்; அந்த நேரத்தில் தப்பாமல் அதை நாம் கையகப் படுத்திக் கொள்ளலாம்," என்றான்.

இன்னும் ஒருவன் "'எருமை ஏரியில் விழுந்தால் தவளைதானே குதித்தோடும்" என்பதனால், எருமைக் கடாவை ஓட்டிக்கொண்டுபோய்த் தண்ணீரில் விட்டால் அது நாலுபக்கமும் நீந்தி ஓடி ஆடித் திரியும். அந்தத் துன்பம் பொறுக்கமாட்டாமல் குதிரை, கரை ஏறி வரும். அப்போது அதை வருத்தமில்லாமல் பிடித்துக் கொள்ளலாம்," என்றான்.

இப்படி நாலுபேரும் சொன்ன சூழ்ச்சிகள் எல்லாம் தனக்கு ஒத்ததாக இல்லாததால் மிலேச்சன், "அவை சரியல்ல," என்று மறுத்து "நான் ஒரு வழி சொல்லுகிறேன் கேளுங்கள்; தூண்டில் போட்டு மீன்பிடிக்கிறது போல இதையும் பிடித்துக் கரைமேல் இழுக்க வேண்டும்," என்றான்.

அதற்கு அவர்கள் எல்லாரும் "ஆம், ஆம், இது நல்ல வழிதான்," என்று உடன்பட்டார்கள்.

தூண்டில் போட்ட புதுமை

பின்பு அவர்கள் தங்களுக்குள் ஒருவன் வைத்திருந்த கருக்கு அரிவாளைத் தூண்டில் முள்ளாகவும், வழியில் உண்பதற்குத் தாங்கள் கொண்டுபோன கட்டுச்

சோற்றைத் தூண்டிலின் இரையாகவும், குரு கையிலே பிடிக்கிற காளைவடிவிற் செய்துவைத்த பித்தளைப் பூண் கட்டிய தடியைத் தூண்டிற் கோலாகவும் ஆயத்தப் படுத்தினர். எப்படியாவது நினைத்ததைச் செய்ய வேண்டுமென்று முடிவு செய்தனர். அப்பால் அப்ப டியே கட்டுச்சோற்றுமூட்டையைக் கருக்கரிவாளின் முனையிலே கோத்தனர். அதன் அடியிலே தலைப்பாகைத் துணியைக் கட்டினர். அதைத் தடியிலே சுற்றி முடிந் தனர். தண்ணீருக்குள் குதிரை தெரிகிற இடத்தில் எறிந்தனர். அது தொப்பென்று விழுந்த விரைவினுல், தண்ணீர் மிகுதியும் ததும்பியது. உடனே அங்கே தோன்றிய குதிரையும் துள்ளியெழுந்து நெளித்துக் கிளம்பினதுபோல் தெரிந்ததால் அவர்கள் எல்லோரும் மிகவும் அஞ்சி ஓடினுர்கள்.

குதிரை பிடித்த வியப்பு

ஆனுல் தலைப்பாகைத் துணியைத் தொடுத்த தடியைப் பிடித்திருந்த ஒருவன் மட்டும் அதைவிட்டு ஓடாமல் அங்கேயே நின்ருன். ஏரியின் அலை அமர்ந்த பின்பு, அதிலுள்ள பெரிய மீன்கள் மெல்ல மெல்ல அணுகின; அவைகள் கட்டுச் சோற்றுமூட்டையைக் கடித்து இழுத்தன. அவன் அந்தக் குறிப்பைக் கண் டான்; கைக் குறிகாட்டி மற்றவர்களை அழைத்தான். "குதிரை இதோ! அது இப்பொழுதுதான் இரையைக் கடிக்கிறது," என்ருன்.

சற்று நேரம் போனபிறகு அவன் அத்தலைப் பாகையை இழுத்தான். அரிவாளில் இருந்த சீலையும் சோறும் போனதனுல், பாகையுடனே கட்டிய அரிவா ளானது அங்கே முளைத்திருந்த ஏரிக் கோரையில்

மாட்டிக்கொண்டது. ஆனால் அவன் அது குதிரையின் வாயில் மாட்டிக்கொண்டதாக நினைத்தான். 'குதிரையின் வாயில் தூண்டில் மாட்டினபோதே குதிரை நம்முடையதாய் விட்டது,' என்று மகிழ்வுற்று மற்றவர்களைக் கூப்பிட்டான். உடனே அனைவரும் கூடிவந்தனர். அவர்கள் தலைப்பாகையைப் பிடித்திழுத்தார்கள், அப் பாகைத்துணி பழையதாகையால் அறுந்து போய் விட்டது. ஐயோ பாவம்! எல்லோரும் ஒருமிக்க மல்லார்ந்து கீழே விழுந்தார்கள்.

இல்லறத்தான் ஒருவன் குருவுக்குக் குதிரை கொடுப்பதாகக் கூறல்

இப்படி அவர்கள் விழுந்த தறுவாயில் அங்கே ஒரு இல்லறத்தான் வந்தான்; அவன் வந்தவுடன், "இஃதென்னை,?" என்று கேட்டான்.

அவர்கள் எல்லாவற்றையும் ஒழுங்குடன் சொன்னார்கள். அதைக் கேட்டு அவன் இவர்கள் அறியாத் தன்மையைக் கண்டான்; கரை மேலே இருந்த குதிரையைத் தன் மேலாடையால் மறைக்க, நீரில் தோன்றிய குதிரையும் மறைந்தது. அதை அவன் அவர்களுக்குக் காட்டி அந்த மயக்கத்தை நீக்கினான்.

அப்போது அவர்கள் தங்கள் குருவை அவனுக்குக் காட்டினர். அவனிடம் "ஐயா! எங்கள் குருத் தலைவர் தளர்ந்த அகவை உடையவர்; ஆகையால், அவர் ஏறிப் போவதற்கு ஒரு குதிரை கட்டாயம் வேண்டியிருக்கிறது. அதை வாங்குவதற்குப் போதிய அளவு பணமில்லை. அதனாலே குறைந்த விலையில் குதிரைமுட்டை வாங்கினோம்! அஃது உடைந்துபோய்விட்டது. பின்ட கூலிக்கு மாடு வைத்தோம்; அதனால் மிகத் துன்பட

பட்டோம்; இப்பொழுது இப்படியாயிற்று,'' என்று எல்லாவற்றையும் விரிவாக அவனுக்கு எடுத்துரைத்தார்கள்.

அவன், இவர்கள் கள்ளமில்லாத நல்ல மனிதர்களென்று நினைத்து மனமிரங்கினான்; அவன் "என்னிடத்தில் ஒரு நொண்டிக் கிழக்குதிரை உண்டு; அது உங்கள் வழிப்போக்குக்கு உதவும்; அதற்காக நீங்கள் எனக்குப் பணங்காசு ஒன்றும் கொடுக்கவேண்டியதில்லை; நான் விலையின்றிப் பரிசாகத் தருகிறேன்; என் ஊருக்கு வாருங்கள்,'' என்று அவர்களை அழைத்துக்கொண்டு போனான்.

ரு. குரு குதிரை ஏறிப் போதல்

இல்லறத்தான் விருந்திட்டுக் குதிரை கொடுத்தது

அந்த மனிதன் செல்வமில்லாத ஏழையானாலும் இரக்கம் உள்ளவன்; அறவிருப்பினன் ஆதலால், அவன் தான் சொன்னபடியே அவர்களை அண்மையில் இருந்த தன்னூருக்குக் கூட்டிச் சென்றான். அன்றிரவு நெய் பால் தயிர் முதலியவைகளால் குறையில்லாமல் பல வகையாக அமைக்கப்பட்ட நல்லுணவு கொடுத்து அருந்திய பிறகு, வெற்றிலை பாக்கு புகையிலை முதலான வைகளும் முறையாகக் கொடுத்தான்.

மறுநாட் காலையில் அவன் தன் கொல்லை வெளியில் மேய்ந்துகொண்டிருந்த நாட்டுத் தட்டாகிய ஒரு குதிரையைப் பிடித்துக்கொண்டு வந்தான்; குருவுக்கு முன்னே கொண்டுவந்து நிறுத்தினான்; அதை அவருக் குக் காணிக்கையாகக் கொடுத்தான். கொடுத்த குதிரையோ வயது சென்று கிழமானது; ஒருகண் குருடு, ஒரு காது மூளி; முன்காலில் ஒருகால் நொண்டி; பின் கால்கள் முட்டிக்கால்களான வடிவமாய் அந்த முதிய குருவுக்கு ஏற்ற ஊர்தியாக இருந்தது. எப்படி இருந் தாலும் பணச் செலவில்லாமல் அகப்பட்டதே என்று அவர்கள் எல்லோரும் மகிழ்ச்சி யடைந்தார்கள்.

பின்பு மட்டி, அக் குதிரையைச் சுற்றி வந்து தடவி யும், மடையன், அதன் நொண்டிக்காலைப் பிடித்திழுத்து முறுக்கியும், மூடன், மொட்டை வாலைப் பற்றி உருவி யும், மூர்க்கன், அதன் நொள்ளைக் கண்ணைத் துடைத் தும், மிலேச்சன், பசும்புல்லைக் கொண்டுவந்து வாயிலே திணித்தும், இவ்வாறாக அதை மிகவும் பாராட்டிக் கொண்டிருந்தார்கள்.

குதிரை ஏற்றத்துக்கு வேண்டும் பொருள் அமைத்தல்

அதற்குமேல் அவர்கள் குதிரைமேல் ஏறிச் செல்வதற்கு வேண்டும் பொருள்கள் தேடத் தலைப்பட்டார்கள். குதிரை கொடுத்தவன் பீற்றலாக இருந்த ஒரு பழைய சேணத்தையும் கொடுத்தான். ஆனால், அதில் குதிரை வாலின்கீழ் மாட்டப்படும் பின் தட்டுவார் இல்லை. ஆதலால் அதற்கு அவர்கள் பாலைக் கொடியைத் திரித்துக் கட்டினார்கள்; அவ்வாறே கடிவாளத்துக்கு வார் இல்லாமையால், 'வழியிலே கண்ட குதிரைக்கு வைக்கோற்புரி கடிவாளம்' என்பதுபோல, பழுதையை முடிந்து வைத்தார்கள்; தங்கப் பட்டையும் இறுக்குவாரும் கிடைப்பதற்கு மிகக் கடுமுயற்சியெடுத்தும் அவை கிடைக்கவில்லை. அதனால் மடத்துக்குப் பக்கத்தில் இருந்த பேட்டைக்குப் போய் அவ்விரண்டும் முன்கால் பின்கால்களிற் கட்டுகிற அசாடி பிசாடிக் கயிறும் வாங்கிக்கொண்டு வந்தார்கள்.

குரு குதிரையேற்றஞ் செய்தல்

இவ்வாறு குதிரைக்கு வேண்டும் பொருள்களெல்லாம் அமைத்தபின்பு, குதிரையேறிச் செல்வதற்குக் கணிதநூல் முறைப்படி வாரசூலையைத் தள்ளி, அமிர்த யோகமான நல்ல முழுத்தம் ஒன்று பார்த்து முடிவு செய்தார்கள். அந்நேரத்தில் 'ஊர் கூடிச் செக்குத் தள்ளுவதுபோல்' ஊரெல்லாம் வந்து கூடினார்கள்; பேரிரைச்சல் இட்டார்கள்; மங்கலவாழ்த்து வாழ்த்தி, பரமார்த்த குருவை முதல்முதல் குதிரைமேல் ஏற்றி வைத்தார்கள். அப்பொழுது, குருவானவர் மிக்க மகிழ்ச்சியோடிருந்தார்; அவர் மாணவர்கள் ஐவரும் எழுந்துநின்று,

"முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்திரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம்போம் காத வழி"

என்றபடியே, ஐந்து மாணவர்களில் ஒருவன் முன்புறத்தி லிருந்து கடிவாளத்தைப் பிடித்திழுக்க, ஒருவன் பின் புறத்திலிருந்து வாலைப்பிடித்து முறுக்கி அதட்டி ஓட்ட,



குரு குதிரை ஏறி வழிச்செல்லும் அழகு

இருவர் பக்கங்களில் இருந்து குருவின் கால்களைக் கை யால் தடவிக்கொடுத்துத் தாங்க, ஒருவன் முன்னே "பரமார்த்த குரு வருகிறார்! பராக்கு! எச்சரிக்கை," என்று கட்டியங்கூறி மேன்மை கூறக் குருவானவர், மிகத் தருக்குடனே குதிரைமேலேறிச் செலுத்தினார்.

கூ. சுங்கம் வாங்குவோன் வரிகேட்டல்

இந்த ஐந்து தாளக் குதிரையின்மேல் குரு இவ்வாறு பெருமிதத்தோடு உடல் பூரிக்க நெடுந்தூரம் போன பிறகு, நடுவழியில் வழிச்சாரி ஆயக்காரன் ஒருவன் கண்டு ஓடிவந்து அவர்களை மறித்தான். அவர்கள் "ஏன் மறிக்கிறாய்?" என்று கேட்டார்கள். அவன் "குதிரைக்கு ஐந்து பணம் ஆயம் கொடுக்கவேண்டும்; அது கொடாமற் போகக்கூடாது," என்றான்.

ஆயப்பணம் செலுத்துதல்

அதற்கு அவர்கள் "இஃதென்ன புதுமை? குரு ஏறின குதிரைக்கும் ஆயம் உண்டா? வணிக முறையா? அல்லது வேலை முறையா? அவையெல்லாம் அல்லவே! எங்கள் குரு முதிர்ந்த அகவையராய் உடல் தளர்ந்திருக்கிறார்; அதனால் அவர் கால்நடையாக நடக்கமாட்டார்; அதைக் கண்டு ஒரு புண்ணியவான், அறம் கருதிக் கொடுத்த குதிரை இது; இதற்கும் ஆயம் வாங்குவதை நாங்கள் எங்கும் கண்டதில்லை. ஆனாலும் முறையற்றது," என்று அவர்கள் கூச்சல் போட்டார்கள்.

அவன் "அறமோ அறமல்லாததோ எனக்கொன்றும் தெரியாது. பணத்தைக் கொடுத்துவிட்டுத்தான் போகவேண்டும்," என்று காலையிலிருந்து நடுப்பகல்வரை மறியலில் வைத்து "அவர்களை விடமாட்டேன்," என்றான்.

பின்பு அவர்கள் தப்பிப்போக வழியறியாது திகைப்புற்றனர். பின் "நாம் கொடாக்கண்டராக இருந்த போதிலும், அவன் விடாக்கண்டனாக இருக்கிறானே, ஐயோ! வீண் தண்டம் இது," என்று ஐந்து பணம்

கொடுத்தார்கள். உடனே அவர்களை அவன் விட்டு விட்டுப் போனான்.

குரு வருத்தப்படுதல்

குரு "குதிரை இல்லாவிட்டால் இத் துன்பம் வர மாட்டாதல்லவா?" என்று தம்மைத்தாமே மிகவும் வெறுத்துக்கொண்டார். அவர் இளைப்பாறும் பொருட்டுத் தம் மாணவர்களுடன் கிட்ட இருந்த சாவடிக்குப் போனார்.

பின்பு அங்கே எதிர்ப்பட்ட ஓர் இல்லறத்தானோடே குருவானவர் தாமே வலுவில் முறையிட்டுக் கொள்ளத் தொடங்கினார்; "அய்யா! நான் பிறந்தநாள் தொட்டு இதுவரையில் ஒருகாலும் குதிரை ஏறினதில்லை; 'ஒரு நாளும் சிரியாதவன் திருநாளில் சிரித்தான்' என்பது போல, இன்றைக்குத்தான் முதல்முதலாகக் குதிரை ஏறி வந்தேன். வந்த இடத்தில் இந்த முறையற்ற செயல் நடந்தது. இப்படி முறையில்லாமல் வழிபறிக்கிற கள்ளனைப்போலத் தீயவழியில் சம்பாதிக்கிற பணம் யாருக்காவது நன்மையாக இருக்குமா? ஏன் வயிறெரிய வாங்கின பணம் அவனுக்குச் செரிக்குமா? நெருப்பாய் மூளாதா," என்றார்.

பணத்தின் மேன்மை

அதுகேட்டு அவன், "ஐயா! பெரியவரே! இது காலத்தின் கோலம்; இந்நாளில் பணமே குரு; பணமே தெய்வம்; 'பணமென்றால் பிணமும் வாயைத் திறக்கும்,' என்பது முன்பே கேட்டோம். அப்போது 'பணம் பந்தியிலே குலம் குப்பையிலே' என்பதற்கேற்பப் பணத்தைவிட வேறே உறவும் நண்பும் இல்லையாகும்," என்றான்.

அதற்கேற்பக் குருவும் "அப்பா! இந்தக் காலத்தில் மலத்தில் அரைக்காசு கிடக்கக்கண்டால் அதை நாவாலே நக்கியெடுக்கக் கூசார்கள்," என்று சொன்னார். அவனும்ஐயமா? அப்படி நக்கி எடுக்கும்பொழுது அஃது அவர்களுக்கு நாறுதையா; இதற்கு ஓர் எடுத்துக்காட்டுக் கேளும்," என்று அவன் சொல்லுகிறான்.

இல்லறத்தான் கதை கூறல்

ஓர் அரசன் இருந்தான்; அவன் பண விருப்பம் முடையவன்: ஆதலால் தான் ஆளும் நாட்டில் ஒரு பொழுதும் இல்லாத வரியெல்லாம் ஏற்படுத்தி வைத்தான்; அதன் பின்பு மூத்திரவரியும் ஏற்படுத்தினான். இஃது அவன் மகனுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவன் "குடிகளிடத்தில் இந்த நாறுகிற வரிகேட்டு வாங்குகிறது, வெட்கக் கேடாக இருக்கிறது," என்று தன் தகப்பனுக்குச் சொன்னான்.

ஆனால், அந்த அரசன் தன் மகனுக்கு அப்பொழுது மறுமொழி சொல்லவில்லை. பலநாள் கழிந்தபின் அவன் சேர்த்து வைத்த வரிப்பணம் பொருளறை நிறையச் சேர்ந்தது. பின்பு தன் மகனை அழைத்தான். அப் பணத்தை மோந்து பார்க்கச் சொன்னான். அவன் மோந்துபார்த்தான். "நாறுகிறதோ?" என்று கேட்டான். அப்போது அவன் மகன் வேறொன்றும் நினைக்காமல் "நாறவில்லை, மணக்கிறது," என்றான். அதற்கு அந்த மன்னன் "இது மூத்திரவரிப்பணம்" என்றான்.

கேட்டீரோ! "பணம் வந்தாற் போதும். அஃது எப்படி வந்தாலும் குற்றமில்லை ஐயா," என்றான் அரசன் புதல்வன்.

குதிரையினால் நேர்ந்த துன்பங்கள்

இவ்வாறு அவர்கள் பல பேச்சுக்கள் பேசிக்கொண்டிருந்து பொழுதுபோக்கினார்கள். பின் அன்று சாயுங்காலம் மீளவும் குதிரை ஏறிப்போய் ஒரு பட்டிக்காட்டிலே தங்கினார்கள். அன்றிரவு குதிரையைக் கட்டிப் போடாமல் மேயவிட்டார்கள்; காலையில் புறப்பட்டுச் செல்வதற்கு அதைத்தேடினார்கள்; அது அகப்படவில்லை. உடனே மூர்க்கன் அதை வீடுவீடாய்ச் சென்று அழைத்துப் பார்த்தான்; அதை ஒருவன் தன் வயலில் கட்டி வைத்திருந்தான். இவன் அதை விட்டுவிடும்படி அம் மனிதனைக் கேட்டான். அதற்கு அவன் "இந்தக் குதிரை இரவு முப்பது நாழிகையும் என் பயிரில் மேய்ந்தது; எனக்கு மிகு பயிர் அழிந்துபோயிற்று; அதனால் விடமாட்டேன்," என்றான்.

அதைக் குறித்து அடுத்த ஊர் நாட்டானே போய் அமர்த்தினான்; அவன் "பயிர் அழிவுக்குக் கொடுத்தால் தான் நான் குதிரையைவிட, ஒத்துக்கொள்வேன்," என்றான். பின்பு நாலுபேருங் கூடிக் குதிரை மேய்ந்த கொல்லையைப் பார்த்தனர்; பார்த்து அது மிதித்து மேய்ந்ததெல்லாம் மதித்தனர் "பத்துப் பண அழிவு எட்டுப் பண அழிவு இருக்கு,"மென்று சொல்லினர். முடிவில் தீர்ந்தபடி நாலுபணத்தை வாங்கிக்கொண்டு அவன் அக் குதிரையை விட்டுவிட்டான்.

குரு குதிரையைப்பற்றி எண்ணுதல்

பின்பு குருவானவர் குதிரையைப்பற்றி மிகவும் சலித்துக்கொண்டார். "நமக்கு இந்தக் குதிரை ஏன்? இது வந்ததால் பணச்செலவு எவ்வளவு? வருத்தங்கள எவ்வளவு? மதிப்புக் கேடு எவ்வளவு? இவைக

ளெல்லாம நம் பெருமைக்குத் தகாதப்பா." என்று கூறிக் கால்நடையாகப் போகத் துணிந்தார்.

அதற்கு மாணவர்கள், "ஆ! ஆ! அது சரியன்று," என்றும், "கால்நடையாக நடக்க உம்மால் ஆகாது," என்றும் சொல்லிக்கொண்டிருந்தனர். அப்போது, அவ்விடத்திலிருந்த ஒரு வள்ளுவப் பண்டாரம், இவை யெல்லாம் கேட்டான்; அவன், இவர்கள் கிட்டவந்து, "கவலைப்பட வேண்டாமையா," என்றான். "இந்தத் துன்பம், கெடுதலெல்லாம், குதிரையைப் பிடித்த கோளா றினால் வந்ததாகும்; செலவோடு செலவாக எனக்கும் ஐந்து பணம் கொடுங்கள்; நான் துன்ப நீக்கம் செய்து, விடுகிறேன்," என்றான். இவர்கள் செலவுக்காக அஞ்சிப் பார்ப்பது காரியக் கேடென எண்ணினர்; பணங் கொடுக்க ஒத்துக்கொண்டனர்; பின், கோளாறை நீக்கக் கூறினார்கள்.

வள்ளுவன் குதிரையின் கோளாறு தீர்த்தல்

அப்பொழுது அந்த வள்ளுவன் "இவர்கள் நம் வலையிற் சிக்கினார்கள்; ஆகையால், இவர்களை ஐயமில்லா மல் நாம் ஏய்க்கலாம்." என்று உறுதிகொண்டான்; பணத்தை முன்னே கொடுக்கச் சொல்லிப் பெற்றுக் கொண்டான். பிறகு அவர்கள் கண்ணுக்கு முன்பாகத் தாட்டோட்டமான சடங்குகளைச் செய்தான்; பலவகைப் பச்சிலைகளைப் பறித்து வந்தான்; மந்திரித்தான்; உருவேற் றினான்; அவைகளை எறிவதுபோலக் குதிரைமேல் எறிந் தான். உரக்கப் பேசாமல் மெதுவாய் முண முண என்ற ஒலியுடன், பலமுறை மெல்லச் சொல்லினான். பின்பு மும்முறை அந்தக் குதிரையை வலமாகச் சுற்றிவந்தான்; வால்முதல் தலைவரை அதைத் தடவினான்; அதன்

ஒற்றைக் காதைக் கையினுற் பிடித்துக்கொண்டான்; "இந்தக் காதிலே கோளாறெல்லாம் தங்கிநிற்கிறது; இப்படிப்பட்ட கோளாறைக் கழிக்கத்தான், அந் நாளில் அந்தக் காதை அறுத்தார்கள்; இந் நாளில் இந்தக் காதையும் அறுத்துவிட்டால், இப்போது வந்த கோளாறும் அற்றுப்போம்," என்று கூறினன்.

உடனே, அவர்கள் வெட்டரிவாளைத் தீட்டிக் கொண்டு வந்தார்கள்; அதன் மற்றொரு காதையும் திடீரென்று அறுத்தார்கள்; கோளாறு தொடராதபடி, அதைத் தூரக் கொண்டுபோய், ஆழக் குழி தோண்டிப் புதைத்தார்கள். மேலே மண் போட்டுக் குறி செய்து விட்டு வந்தார்கள். இவ் வேலையிலேயே அன்றெல்லாஞ் சென்றது. அவர்கள் மறுநாட் காலையில், மிகத் துன்பப் பட்டுத் தம் மடத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

எ. பார்ப்பான் சோதிடம் சொல்லுதல்

குரு குதிரையினுல் வந்த துன்பத்தை நினைந்து வருந்தல்

மடத்திற்குப் போனபிறகு, குருவானவர் மிகவும் வருத்தப்பட்டார். "நமக்குக் கிடைத்த குதிரை அழ கில்லாதது; ஆயினும் பணச் செலவில்லாமல் வந்தது; அதனுல் சிறிது மகிழ்ச்சியாயிற்று. ஆயினும், இக் குதிரையினுல் வழியில் நடந்த துன்பங்களை எல்லாம், நினைக்க நினைக்கத் தீராத மனவருத்தம் உண்டாகின்றது. தெய்வச் செயல் இப்படியும் இருக்கிறதல்லவா," என்று எண்ணமிடலானுர். பின்பு குருவானவர், மாணவர்களைத் தம் முன்பு கூட்டிவைத்துக் கொண்டார்; ஞானப் பொருள் குறித்துப் பேசத் தொடங்கினுர் :—

" தம்பிமாரே! இந்த உலக வாழ்வை ஆழ்ந்து நோக்கினுல் முயற்கொம்பு போன்றது ; கானல்நீர் போன்றது; ஒன்றும் அற்றது என்று காண்கிறேன். தீமை கலவாத நன்மையும், கசப்புக் கலவாத இனிப்பும், துன்பங் கலவாத மகிழ்வும் இங்கே கிடைக்கப்படமாட்டா. ஐயோ! விலைகொடுத்து வாங்காமல், பரிசாகக் குதிரை வந்ததென்று நாம் மிகவும் மகிழ்ந்தோம் அல்லவா? அன்றுதானே இந்த நன்மையுடன் தொடர்ந்துவந்த துன்பங்களையும் கண்டீர்களே! ஒரு துளி தேனை நக்குவதற்காக அத்தனை கசப்பையும் விழுங்க வேண்டுமோ? நெல்லுக்கும் உமி இருக்கிறது. எவ்வகைக் கனிகளுக்கும் தோலும் கொட்டையும் உண்டு. இவையெல்லாம் இயல்புதான். ஆனுலும், நான் ஒருநாளில் அடைந்த பொல்லாப்போ மிகவும் மிகுதி. குதிரை ஏறுகிறதற்கு எனக்கு நல்வாழ்வு இல்லைபோலும்; ஊழ்வினைக்கு எதிராய் நடக்க என்னுற் கூடுமா? கூடாதே! ஆதலால்,

இனி அந்தக் குதிரையை அது இருந்த இடத்திற்குத் திருப்பி அனுப்பிவிடுவதே நல்லதாகும். இனிமேல் அது நமக்கு ஆகாது," என்றார்.

அதற்கு மாணவர் எல்லோரும், "ஆகா! அப்படிச் சொல்ல வேண்டாமையா; அஃதென்னே? நீர்கொண்ட குதிரையோ? நாங்கள் தேடின குதிரையோ? இரண்டில் ஒன்று மன்றே; கடவுள் அருளால் தானகவே கிடைத்த குதிரையன்றோ? நாம் இதைத் திரும்ப அனுப்பினல், திருவுளத்துக்கு மறுவுளமாக நடக்கிற தாகுமே; ஆதலால், அது மிகக் கோளாருய் முடியாதா? குதிரையைப் பிடித்திருந்த கெடுதலை அந்த வள்ளுவன் கழித்து நீக்கிய பின்பும் அஞ்சத்தக்கது என்ன இருக்கின்றது, ஒன்றுமில்லையே," என்றார்கள்.

குரு ஏற்றுக்கொள்ளுதல்

இவைபோன்ற இன்னும் பல உண்மைகளை அவர்கள் விரிவாகச் சொன்னர்கள். குருவும் மனந்தேறினர்: "நீங்கள் சொன்னபடி ஆகட்டும்," என்றார். ஆனலும் அன்று வந்த துன்பம்போல், இனி வராதபடி இருக்க இரவில் குதிரையை மேயவிட வொண்ணது; வீட்டிலே தானே கட்டிவைக்க வேண்டும்; அதற்கான இடமுங் காணேமே," என்றார். மூர்க்கனென்பவன், இதற்கான எண்ணமென்ன? இந்த நொடிப்பொழுதிலேயே நான் போய் ஆலங்கொம்புகளை வெட்டிக்கொண்டு வருகிறேன். நம்முடைய மடத்துக்கு ஒரு மூலையிலே நேர்த்தியான குதிரைக்கூடம் ஒன்று, மிகவும் அழகாகக் கட்டுகிறேன்," என்றான்.

மூர்க்கன் குதிரைக்கூடம் கட்டுதல்

பின்பு அவன் புறப்பட்டுப் போனன்; வழி ஓரத்தில் பெரிய உயர்ந்த ஆலமரம் ஒன்று இருந்தது; அதன்மேல்

ஏறினான். அதில் செழிப்பாய் உயர்ந்து வளர்ந்து ஒழுங்கா யிருந்த ஒரு கிளையைக் கோடரியால் வெட்டத் தொடங்கினான்.

ஆனாலும் இவன் நுனிப்பக்கத்தில் இருந்து கொண்டு அடிப்பக்கத்தை வெட்டினான்; வழிப்போக்க



மூர்க்கன் குதிரைக்கூடம் கட்ட மரம் வெட்டுதல்

னாக அப்போது வந்த ஒரு பார்ப்பனன் அதைக் கண்டான்; "தம்பீ! அப்படி நிற்க வேண்டாம்; கிளை

யோடே நீயும் விழப்போகிருய்," என்ருன். அதற்கவன், இத்தீய நிலைச் சொல்லை எனக்கு நீ சொல்லவா வந்தாய்?" என்று அரையிற் செருகிவைத்திருந்த வெட்டரிவாளை அப் பார்ப்பனன்மேல் எறிந்தான். அவனும் இந்த முரடன், "பட்டறி கெட்டறி பத்தெட் டிறுத்தெறி," என்றபடியே, இவன் பட்டறியட்டுமென்று விலகித் தப்பிப் போய்விட்டான்.

மூர்க்கன் அதன் பிறகு, முன் நின்றபடியே பின்னும் நின்று, அம் மரத்தை வெட்டினுன். பின்பு அது அரை வாசிக்கு மிகுதியாக வெட்டுண்டு மளமளவென்று முறிந்து விழுந்தது; அவனும் அதனோடே விழுந்தான்.

மூர்க்கன் ஆரூடம் கேட்ட அழகு

விழுந்ததும் "அம்மம்மா! இங்குவந்த அந்தப் பார்ப்பான் சிறந்த அறிஞன்; சிறந்த புரோகிதன்; அவன் சொன்னபடி ஆயிற்று," என்று கடுக எழுந்தான்; அப் பார்ப்பனனைப் பின்பற்றிக் கூவிக்கொண்டே ஓடினுன். மிக விரைவில் இவன் கிட்ட ஓடிவருவதை அந்தப் பார்ப்பனன் கண்டான். "இந்தப் புத்தியில்லாத விலங்கு என்ன செய்யுமோ!" என்று அஞ்சி நின்ருன்.

உடனே மூர்க்கன் அங்கு வந்தான்; அவனுக்கு ஒரு கும்பிடு போட்டான்; "ஐயா! பேர்பெற்ற பேரறிஞரே, இன்னும் ஓர் ஆரூடம் எனக்குச் சொல்லவேண்டும்; நான் பரமார்த்த குருவின் மாணவன்; அவர்மேல் எனக்கு மிக்க பற்றுதல் உண்டாயிருக்கின்றது. அவருக்கு முதிர்ந்த அகவை வந்துள்ளபடியால், அவர் சிறிது நாட்களுக்குள், சாவாரென்று அஞ்சி யிருக்கிறேன். அவருக்கு முடிவுகாலம் எப்பொழுது வரும்? அதற்கு முன் காணப்படும் அடையாளம் என்ன? இப்பொழுது

நீர் எனக்கு ஆறுதலாகச் சிறிது தயவுசெய்து சொல்ல வேண்டும்," என்றான்.

பார்ப்பனன் சோதிடம் உரைத்தது

அப் பார்ப்பனன் தான் தப்புவதற்குப் பலவாறான போக்குச் சொன்னான்; மூர்க்கன் கேட்கவில்லை; அவனை விடவுமில்லை; கடைசியில், "ஆசன சீதம் சீவன் நாசம்," என்றான். இவன் "ஐயா! அஃதென்னை? அதற்குப் பொருள் சொல்லவேண்டும்," என்று அவனை அலட்டிக் கேட்டான். அவன் "உன் குருவுக்கு இருப்பிடம் என்றைக்குக் குளிர்ந்து தோன்றுகிறதோ, அன்றைக்கு அவருக்குச் சாவு கிட்டினதாம்; இதுதான் அதற்கு அடையாளம்," என்று சொன்னான்.

ஆரூட நிலையை மூர்க்கன் குருவுக்கு அறிவித்தல்

பின்பு மூர்க்கன் பார்ப்பனனை வணங்கிவிட்டுப் போய்த் தான் வெட்டின கிளையை மடத்துக்கு இழுத்துக்கொண்டுபோய்ச் சேர்த்தான்; நடந்த செய்தியெல்லாம் விளக்கமாக அவருக்குக் கூறினான். குரு அதைக்கேட்டு மிகவும் வருத்தமுற்றார். "சோதிடம் சொன்ன பார்ப்பான் பேரறிஞன்; நூல்களில் சிறந்த அறிவுள்ளவன் இல்லையென்று சொல்லக்கூடாது. உனக்கு அவன் சொன்னபடி உடனே உண்மையாக நடந்ததே. ஆதலால், எனக்கு அவன் சொல்லியனுப்பின சோதிடமும் தவறாது நடக்கும். 'ஆசனசீதம் சீவன் நாசம்' என்பது நல்ல சூழ்ச்சியும் அழுந்தியறிந்த சொல்லுமாகும். இனி நான் உன்னிப்பாக இருக்கவேண்டும். ஒருகாலும் கால்களைக் கழுவக்கூடாது; அதன்மேல் ஆண்டவன் விட்டபடி ஆகிறது," என்றார்.

அ. குரு குதிரைமேலிருந்து விழுதல்

குரு பணம் தேடப் போதல்

பார்ப்பனன் சொன்னபடி குரு மிகவும் உன்னிப்பாக நெடுநாளாக இருந்தனர். பின்பு பல நாடுகட்குப் போய்வந்தால்தான் மற்ற மாணவர் கையிற் பணம் கிடைக்கும்; மடத்திலேயே இருந்தால் ஒன்றும் கிட்டாது என்று அதற்காக ஊர் ஊராய்ச் சுற்றிவரக் குருவும் மாணவர்களும் புறப்பட்டார்கள்.

மாணவர் குருவின் விழுந்த தலைப்பாகையை எடுத்தல்

அவ்வாறே எங்கும் போய்ச் சுற்றினர்; பின்பு அவர்கள் ஒருநாள் மடத்துக்குத் திரும்பி வருகையில் குரு அசைந்து அசைந்து குதிரைமேல் ஊசலாடிக்கொண்டு வந்தார். அப்பொழுது வழியில் கீழே தொங்கின மரக் கொம்புபட, அவர் தலைப்பாகை பின்புறத்தில் விழுந்தது. அவர் அதைத் தம் மாணவர்கள் எடுத்தார்களென்று எண்ணினர்; அதனால் ஒன்றும் பேசாமல் நெடுந்தூரம் சென்றனர். பின்பு அவர் "தலைப்பாகை எங்கே? தாருங்கள்," என்று தம் மாணவரைக் கேட்டார். "அஃது அங்கே விழுந்த இடத்திலே கிடக்கும்," என்று அவர்கள் சொன்னார்கள். அவர் அவர்களைச் சினந்துகொண்டு, "விழுந்தவற்றையெல்லாம் எடுக்கத் தேவையில்லையோ? நான் சொல்ல வேண்டுமோ," என்றார்.

உடனே மடையன் அங்கே ஓடிப்போய் விழுந்த பாகையை எடுத்து வருங்கால், அதற்குமுன் பெய்த மழையினால் செழிப்பாக வளர்ந்திருந்த புல்லைக் குதிரை மேய்ந்திருந்தது; அதனால் அன்றிரவு குதிரை கழித்த

இளகலாகிய லத்தியை அந்தத் தலைப்பாகையில் ஏந்திக் கொண்டுவந்து, அச்ச அன்புடன் குருவின் கையில் ஒப்பு வித்தான்.

எடுக்க வேண்டுவன எழுதிக் கொடுத்தல்

அப்பொழுது அவர் வெகுண்டு, "சீசீ!" என்று அவனை மிகவும் சினந்து வைதார்; அதற்கு அவர்கள் எல்லோரும் ஒன்றுகூடினர். அவர்கள் "இஃது ஏதையா! விழுகிறவை எல்லாவற்றையும் எடுக்கச் சொல்லி முன் கற்பித்தீர் அல்லவோ? குரு சொல்லைக் கடக்கலாகாதென்று கற்பித்தபடி செய்தால், இப் பொழுது நீர் வருத்தப்படுவானேன்?" என்றார்கள்.

குரு "அப்படியன்று; எடுக்கத் தகுவதும் தகாததும் உண்டு; எதையும் பகுத்தறிந்து நடக்கவேண்டும்," என்றார்.

"நாங்கள் அவ்வளவிற்குத் தக்க மனிதரல்ல; எடுக்க வேண்டுவதை மட்டும் இன்னதென்பதாக வேறே எழுதித் தரவேண்டும்," என்று கேட்டார்கள். அவரும் அவ்வாறே எழுதிக்கொடுத்தார்.

குரு குதிரைமேலிருந்து விழுதல்

அப்புறம் குதிரைமேல் ஏறிச் செல்கையில் ஈரமாக இருந்த வழுக்கு நிலத்தில் சென்றது; தளர்ந்த நடையாய்ப் போகிற அந் நொண்டிக்கால் குதிரை சருக்கி விழுந்தது. அப்போது அதன்மேல் இருந்த குருவும் தவறி, அருகே இருந்த குழியில் தலைகீழும் கால் மேலுமாக விழுந்தார். அவருடைய ஒரு கால் அங்கவடியில் மாட்டிக்கொண்டது; அதனால் அவர் கோவென்று அலறினார்; அவர் "அன்பான மாணவர்களே! என்னை எடுக்க வாருங்கள்," என்று கூப்பிட்டார்.

மாணவர்களும் சரேலென்று ஓடிவந்தனர்; குரு முன்னே நின்று, அவர் எழுதித் தந்த குறிப்புச் சீட்டை எடுத்து ஒருவனை அவருக்கு முன் படிக்கச் செய்தனர்.



குரு குதிரை மேலிருந்து தவறி விழுந்தது

அதிலே, "விழுந்த தலைப்பாகையை எடுக்கவும், விழுந்த வேட்டி மேலாடையை எடுக்கவும், விழுந்த சட்டை குட்டை உள்ளாடைகளை எடுக்கவும் வேண்டும்," என்று

எழுதியிருந்ததைப் படித்தனர். அவர்கள் அவ்வாறே குருவினிடமிருந்து ஒவ்வொன்ருய் எல்லாவற்றையும் கழற்றி எடுத்து அப்புறம் வைத்தார்கள்; குரு மட்டும் ஆடையில்லாது அம்மணமாகக் கீழே கிடந்தார்.

விழுந்த குருவை மாணவர்கள் எடுக்க மறுத்தல்

அவர் அந்தக் குழியிலிருந்து தம்மையும் தூக்கி எடுக்கச் சொல்லி எவ்வளவோ கெஞ்சினுர்; எவ்வளவோ சலித்துக்கொண்டார்; எவ்வளவோ கடுஞ்சொற்கள் கூறினுர்; ஆனுலும் அவர்கள் அவரைத் தூக்க இசைந்தாரில்லை. அவர்கள், "இதுவும் முன்னமே விளக்கச் சீட்டில் எழுதவில்லை; அதனுல் நாங்கள் உம்மைத் தூக்கி விடமாட்டோம்," என்று ஒரே பிடிவாதமாகக் கூறினுர்கள்.

குரு இவர்கள் பிடிவாதத்தைக் கண்டார்; தப்பும் வழி வேறென்றும் தோன்றவில்லை; ஆகையால், ஓலையும் எழுத்தாணியும் அவர்களிடம் வாங்கிக் கிடந்தபடியே "நான் விழுந்தாலும் என்னையும் எடுக்கக் கடவீர்கள்," என்று கைகால் நடுங்கிக்கொண்டே எழுதிக் கொடுத்தார். அவர் எழுதினதைக் கண்டு அவர் மாணவர்க ஒருமிக்கப் போய் அவரை எடுத்தார்கள். அவர் விழுந்த குழியில் சேறு இருந்தபடியால், குரு உடம்பெல்லாம் சேறுபட்டு அழுக்குப் படிந்திருந்தது; அதனுல் பக்கத்தி லிருந்த தண்ணீரிலே அவரைக் குளிப்பாட்டினுர்கள். பின்பு உடம்பெல்லாம் உள்ள ஈரத்தைத் துடைத்து ஆடைகளை உடுத்துவித்துக், குதிரைமேல் ஏற்றினர். அவரை மடத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள்.

கூ. குருவைப் புதைத்தது

குருவின் மன வருத்தம்

குருவானவர் குழியில் விழுந்து எழுந்திருக்க முடியாமற் கிடந்தபோது, மாணவர்கள் மிகவும் அஞ்சிப் பதறினர். அதனால் அந்தப் பார்ப்பான் முன்பு சொல்லியிருந்த சோதிடத்தின் மேல் ஒருவருக்கும் நினைவில்லாமற் போயிற்று. திரும்பக் குதிரை யேறினபிறகு, தமது இருப்பிடம், குளிர்ந்த தென்று கண்டார்; குருநாதர் வருத்தப்பட்டார். ஆயினும், மடத்துக்குப் போய்ச் சேருமளவும் ஒன்றுஞ் சொல்லாது போனார்.

தளர்ந்த அகவையர் ஆனதால், அவர் விழுந்த அதிர்ச்சியினால், அன்றிரவு தூக்கங் கொள்ளாமல், மருண்டு புரண்டு கொண்டிருந்தார். அன்றியும் பார்ப்பான் சொன்ன சோதிடம் அடிக்கடி அவர் நினைவில் தோன்றிற்று; அதனால் அவர் மிக மனம் ஏங்கினார். குதிரைமேல் இருந்து குழியில் விழுந்ததால் உடம்பு அதிர்ந்து, இப்படி ஆராட்டப் படுகிறோமென்று அவர் நினைக்க வில்லை. ஆசனம் குளிர்ந்து சாகுங்காலம் கிட்டியதால்தான் இவையெல்லாம் நிகழ்கின்றன என்று அவர் உறுதி பண்ணிக் கொண்டார்; இந்த நினைவோடு அன்று இரவு முழுவதும் தமக்குள்ளே அஞ்சிப் பதறி ஒரு விநாடி நேரமும் கண்மூடாமல் பெருமூச்சுவிட்டு மனம் தத்தளித்ததனால், விடியற்காலத்தில் தம் மாணவர்களை அழைப்பித்தார்.

மாணவர்கள் குருவைக் காண்பது

அவர்கள் வந்து பார்த்தார்கள். அவர்கள் அவருடைய கண்கள் குழிவிழுந்து ப்ஞ்சடைந்ததாகவும்,

முகமெல்லாம் வற்றிச் சுருங்கி வெளுத்துச் சாயல் மாறி னதாகவும், வாயுதடு உலர்ந்து நாவில் ஈரமில்லாமல், சொற்கள் குளறினதாகவும், பித்துப் பிடித்தது போல் உற்று உற்றுப்பார்க்க மேல் மூச்சு வாங்குவதாகவும் கண்டு அச்சமுற்றார்கள். அப்பொழுது அவர் பெரு மூச்செறிந்து, "தம்பிமாரே! எனக்குச் சாகும் துன்பம் நெருங்கி விட்டது; இனி உயிர் உடம்பினின்று பிரிந்து வெளிச் செல்லும்போல் தோன்றுகிறது. நீங்கள் எனக்கு அடக்கக்குழி யொன்று வகுத்து அதில் என்னை வைத்து, பிணத்தை மூடுவதுபோல மூடிவிடுங்கள்," என்றார்.

அஃதேனையா? என்று அவர்கள் உடல் பதறக் கேட்டார்கள். "ஓ! ஓ! இஃதென்னை? 'ஆசன சீதம் சீவன் நாசம்,' என்றதை மறந்து போனீர்களோ?" என்று சொல்லிப் பின்னும் சொல்லுவார். நேற்று நான் விழுந்த குழியிலேயே நீரும் சேறும் மிகுதியாக இருந்தபடியால் எனக்கு இருப்பிடத்தில் ஈரம் தாங்கி யது; ஆனாலும், அப்போது உண்டான துன்பத்தினாலே அஃது எனக்குத் தோன்றாமற் போயிற்று. பிறகு மிகுதி யாய் இருப்பிடங் குளிர்ந்ததும் நான் கண்டேன். பார்ப் பான் சொன்ன சோதிடத்தையும் நான் நினைத்தேன். இரவு முழுதும் உடம்பு வலியும் ஆராட்டமும் கண்டது. சற்றும் உறக்கம் இல்லாததால், சாவுகிட்டினதென்று நன்றாய் அறிந்து கொண்டேன்; இனி வேறு எண்ணம் வேண்டுவதில்லை; விரைவில் அடக்கக் குழிக்கு ஏற்பாடு செய்யுங்கள்," என்றார்.

குருவை மாணவர் தேற்றுதல்

அதைக் கேட்டு அவர்களும் அந்தத் தீய குறியை நினைத்து அஞ்சினார்கள். அஞ்சினாலும் அச்சத்தை

வெளிவிடாது உள்ளே அடக்கிக் கொண்டார்கள்; குருவின் மனம் தேறும்படி ஆறுதலும் தேறுதலுமான பல பல மொழிகளைக் கூறினார்கள். என்ன சொல்லியும் அவருக்கு மனக்கவலை மாறவில்லை. அதை அவர்கள் தெரிந்து கொண்டார்கள். அந்த ஊர்க் குறிசொல்லுவதில் வல்லுநனை 'அசேத மூர்த்திமகன் அசங்கதன்' என்பவனால் தங்கள் குருவைப் பிடித்த சனியை நீக்கி, அவர் மனத்தைத் தேறச் செய்ய வேண்டுமென்று அவனைப்போய் அழைத்தார்கள்.

அசங்கதன் உசாவல்

* அசங்கதன் நடந்த வரலாறுகளை யெல்லாம் விளக்கமாகக் கேட்டான்; அதன்பின் குருவைப் பார்த்து உமக்கு நடந்த குறை யென்ன? வந்த நோவென்ன? மனக்கவலை யென்ன? மாறாத வருத்த மென்ன? என் குருவே! என் ஐயனே! என் தந்தையே! சொல்லும்," என்று கண்ணீர் சோர, வாயிதழ் துடிக்க, முகம் வியர்க்கக் கேட்டான். அதற்கெல்லாம் குருவானவர் "ஆசன சீதம் சீவன் நாசம்," என்னும் மொழியைத் தவிர வேறொரு விடையும் சொன்னாரில்லை. அதற்கு அவன் நல்லது" 'ஆசன சீதம் உமக்குச் சீவன் நாசம்,' என்று ஒரு பார்ப்பான் சொன்னான் அல்லவா? நானும் அவன் இருப்பிட வெப்பம் அவனுக்குக் கேடாகச் செய்கிறேன்; அந்தப் பார்ப்பனனை எனக்குக் காட்டுங்கள்; அவனுக்கு உலக்கைப் பூசை பண்ணி, அவனால் வந்த தீமையெல்லாம் அடியோடே இல்லாமல் தீர்த்து விடுகிறேன்; அவனைக் காட்டும்! மிகவிரைவில் காட்டும்," என்றான்.

---

* அசங்கதன்—அருவருக்கத் தக்கவன்.

"உலக்கைப் பூசை யென்றும் ஒரு பூசை உண்டோ? ஒரு நாளும் அப்படிப்பட்ட வழிபாட்டை நான் கண்டது மில்லை; கேட்டது மில்லையே; அஃதெப்படிப் பட்டது? சொல்," என்று குருவானவர் கேட்டார். அதற்கு அசங்கதன் "இவ்வகைப் பூசை உட்சமயம் புறச் சமயங்களிலும் காணக்கிடைக்காத பூசையாகும்; உன்னிப்பாகக் கேட்கக் கடவீர்:—

உலக்கை வழிபாடு செய்த ஒருத்தி

" ஓர் ஊரில் ஒரு செட்டி இருந்தான்; அவன் மிகச் சிவபத்தியுள்ளவன்; நாள் தோறும் பண்டாரங்களுக்கு உணவு இடவேண்டு மென்னும் பெருவிருப்பமும் உடையவன். அதனால் அவர்களை எங்கே கண்டாலும் அவன் 'அடிகாள்! அடிகாள்! அடியேனுடைய சிறு குடிலில் பிச்சை செய்வதற்கு எழுந்தருள வேண்டும்,' என்று அழைப்பான்; அவனுக்கு மக்கள் இல்லை; கொண்ட மனைவியோ என்றால், நாள்தோறும் பண்டாரங்களுக்குச் சோறாக்குதற்கும் கறியாக்குதற்கும் பரிமாறுதற்கும் மிக வருந்துபவள்; கணவன் செய்வது அவளுக்குப் பொருந்தவில்லை; ஆனாலும் இதைக் குறித்துக் கணவனிடத்தில் ஏதாவது வெறுப்பாகச் சொன்னால் அவன் மனம் பொறுக்க மாட்டானென்று எண்ணினாள்; அதற்கொரு சூழ்ச்சி செய்தாள்.

ஒருநாள் அந்தச் செட்டி தன்னுடைய கடையில் இருந்தான்; அவ்விடத்தில் ஒரு பண்டாரம் வரக் கண்டான்; அவனை அழைத்து, 'என் வீட்டில் இன்றைக்குப் பிச்சை பண்ண வேண்டுமையா,' என்றான். அவனும் சரியென ஒத்துக் கொண்டான். அப்போது அடிகாள்! நான் இப்போது கடையிலே வேலையாக இருக்கிறேன்.

நீர் என் வீட்டுக்குப் போய் என் மனைவியைப் பாரும். பார்த்து இச் செய்தியை அவளிடம் சொல்லும்; நான் அங்கு வருமளவும் எங்கும் போய்விடாமல் அங்கே தானே தங்கியிரும்,' என்றான். பண்டாரம் மகிழ்ச்சியாய்ச் சென்றான்: அவளைக் கண்டான்; செட்டி சொன்னதை அவளிடம் சொன்னான். அதற்கு அவள் இவன் ஒருகாலும் இங்கே வராதவனென்று கண்டு கொண்டாள்; அவள், 'ஐயா, மிகவும் நல்லது! நீர் இங்கேதானே இரும்,' என்று தன் வீட்டுத் திண்ணையின்மேல் ஒரு பாயைக் கொண்டு வந்து விரித்தாள். அவன் அதில் இருந்தான்.

உடனே அவள் வீட்டு முற்றத்தை நன்றாய்ப் பெருக்கினாள்; எங்கும் சாணத்தைக் கரைத்துத் தெளித்தாள்; தீற்றி மெழுகினாள்; தன் கால் கைகளையும் நன்கு கழுவித் தூய்தாக்கினாள்; ஒழுக்கமுறையாக நெல்லுக்குற்றுகிற உலக்கையைக் கையில் எடுத்துக் கொண்டாள்; பிறகு அவ்வுலக்கை முழுதும் சாம்பலைப் பூசினாள், தானும் சாம்பலைப் பூசிக்கொண்டாள்; நடுவாசலில் அதைக் கிடத்தினாள்; அதற்கு எதிரே மூன்று முறை உடலுறுப்பெல்லாம் நிலத்தில் படியக் கீழே விழுந்து பணிந்தாள்; வாயைத் திறந்து உரக்கப் பேசாமல் மறை மொழி ஓதுவதுபோல் 'முணமுண' என்றாள். அப்பால் அந்த உலக்கையைச் சாம்பல் போகும்படி துடைத்தாள். முன்னே அஃது இருந்த இடத்தில் தானே வைத்தாள்; இஃதெல்லாம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த பண்டாரம், மிக வியப்பெய்தினான். அவன், 'இந்நாள் வரையிலும் நான் எங்கும் பார்த்திராத வியப்பை இப்போது இங்கே கண்டேன். இஃதென்ன வழிபாடம்மா' என்று கேட்டான்.

அதற்கு அவள் 'ஐயா! இது எங்கள் குலதெய்வத்தின் சிறப்பு வழிபாடாகும்; இனிமேல் நீரும் நன்ருய் அறியப் போகின்றீர்,' என்று தன் வீட்டுக்குள் நுழைகையில் இஃது உன் தலை மேலேதான் வந்து விடியும் என்று தாழ்ந்த குரலில் தனக்குள்தான் சொல்லிக் கொள்வது போலச் சொல்லிக் கொண்டு போனுள்.

அப்படி அவள் மெல்லச் சொன்னுலும், அச்சொல் அவன் காதில் விழவேண்டு மென்பது அவள் விருப்பம். அவ்வாறே அந்தச் சொல் அப்பண்டாரத்தின் காதிலே விழுந்தது. அப்போது அவன் 'நான் கடவுள் அருளால் தப்பிப் பிழைத்தேன்' என்று எண்ணிக்கொண்டு, செட்டிச்சி தன் வீட்டில் நுழைந்தும் நுழையாததன் முன்பே அவன் ஓசையில்லாமல் எழுந்தான்; விரைவில் எளிதாகத் தப்பிப் போய் விட்டான்.


அவன் போனவுடன் செட்டி வந்து சேர்ந்தான்; அவன் 'நான் அனுப்பின பண்டாரம் எங்கேயடி'? என்று கேட்டான். அவள் "நல்ல பண்டாரத்தையன்ருே இப்போது அனுப்பினீர். அவர் வந்தவுடனே இந்த உலக்கையைத் தரச்சொல்லிக் கேட்டார்; அதற்கு நான் செட்டியார் இப்போது வருவார்; அவரைக் கேட்காமல் நான் கொடுக்கக் கூடாது; சற்றே இருமென்று இதோ இந்தப் பாயையும் விரித்துப் போட்டேன், பாரும்; அவர் அதைக் கேளாமல் உடனே சினந்து கொண்டு போய்விட்டார்," என்ருள்.

அது கேட்டுச் செட்டி 'அடி, அப்படியன்றோ! பண்டாரங்கள் என்ன கேட்டாலும் கொடுக்கிறது எனக்கு ஏற்றதுதானே. நீ அறியாயோ', என்று சொல்லி, உலக்கையைக் கையிலெடுத்துக் கொண்டு, பண்டாரத்தைத்

தேடி, அதை அவனிடம் கொடுக்கும்படி தெருவின் வழியாக அவனைத் தேடிப் போனான்.

பண்டாரமும் நடக்கும் செயலை முற்ற முடியக் காண எண்ணினான்; அதனால் அவன் ஒரு தெருவின் முடுக்கில் ஒதுங்கியிருந்தான். அவன் செட்டி உலக்கை யோடே வருவதைக் கண்டான்; அப்போது, 'இஃதேது? இவன் என் தலை மேலே பூசை முடிக்க வருகின்றானே,' என்று அஞ்சி ஓட்ட மெடுத்தான்.

செட்டியும் அதைக்கண்டு 'பண்டாரமே! பண்டாரமே!!' என்று அவனைப் பின் தொடர்ந்து ஓடினான்.



செட்டி பண்டாரத்துக்கு உலக்கை கொடுக்கப் போகுதல்

அவன் அதைக்கண்டு மிக விரைவாக ஓடினான்; அவன் ஓட ஓடக் கடைசியில் செட்டிக்கு முதிர்ந்த அகவையும்

பெருத்த தொந்தியும் ஆதலால், இளைப்பு உண்டாகி ஓடமாட்டாமல் கால்சலித்து அம்மட்டிலேயே நின்றான்; பின் வீட்டுக்குத் திரும்பி விட்டான்.

இதுதான் உலக்கை வழிபாடு. இந்த வழிபாட்டை உமக்குச் சோதிடம் சொன்ன அந்தப் பார்ப்பான் முதுகின்மேல் நான் முடிப்பேனானால், இருப்பிட வெப்பக் கேடு அவனுக்கே அல்லாமல், உமக்கு வராதையா," என்றான்.

அசங்கதன் உண்மையை வெளியிடுதல்

இதற்குப் பரமார்த்த குருவும் சிரித்தார்: அவர், "உன்னை 'அசங்கதன்' என்று சொல்வது முறைமையே; நீ எப்போதும் இன்பக் கேலிகளே செய்து வருகிறாய்;" என்றார்.

அவன் குரு சிரித்ததைக் கண்டான்; கேலியை விட்டு விட்டு மீண்டும் சொல்லத் தொடங்கினான்; "ஐயா பார்ப்பான் சொன்ன சோதிடவுரை உண்மை தான்; அதற்குரிய பொருளை நன்றாக ஆராய வேண்டும். இருப்பிடத்திற் குளிர்ச்சி கண்டால் சாவுக்கு அடையாளம் என்றது சரியே; ஆயினும், வேறு காரணம் இல்லாமல், இருப்பிடம் குளிர்ந்து போனால்தான் இவன் சொன்னபடி ஆகும்; நீர் தண்ணீரிலேயும் சேற்றிலேயும் விழுந்தீர்; அதனாலே இருப்பிடம் குளிர்ந்தது வியப்பாகுமா? அப்போது குளிராமல் இருந்தால்தான் வியப்பாகும்; இப்போது இந்த வீண்கவலையை விட்டு விடும். இனிமேல் சேற்றில் உட்காராமலும், தண்ணீரில் விழாமலும், மற்றொரு காரண மில்லாமலும் ஆசன சீதங் கண்டால் அப்போது சீவ நாசம் கிட்டின தென்று நினைக்கலாம்.

இஃதொழிய மற்றவை யெல்லாம் பொய்யையா பொய்," என்முன். அசங்கதன் சொன்னது குருவின் மனதிலே தைத்தது; அஃது உண்மையாகத் தோன்றிற்று: ஆதலால், அவர் சற்றுத் தேறி யெழுந்தார்; உணவு உண்டார்; அங்கங்கே நடமாடவும் தலைப்பட்டார்.

குரு அஞ்சுதல்

இப்படிச் சிலநாட்கள் கழிந்தன; பிறகு ஒருநாள் இரவு நடுச்சாமத்துக்குமேல் பெருந்தமழை ஓயாமற் பெய்தது. அப்பொழுது குருவின் படுக்கையில் ஈரம் இருந்தது; அஃது, முகட்டு நீரொழுக்கு விழுந்து அவர் ஆசனத்திற்கு நேரே அடுத்தாற்போல இருந்தது; அஃது அவரின் மிகுந்த தூக்கத்தினுல் அவருக்குத் தெரியாமற் போயிற்று. மழையும் மழையொழுக்கும் நின்றது. அப்போது குருவானவர், மெய்ம்மறந்து தூக்கத்தோடு புரண்டு புரண்டு தூங்கினுர்; தமது இருப்பிடத்தில் ஈரம் உறைக்கும்படி உறங்கிக் கிடந்தார். அப்படித் தாக்கின குளிர்ச்சியினுலே, அவர் திடீரென விழித்துக் கொண்டார்; இருப்பிடம் மிகவும் குளிர்ந்ததாகக் கண்டார்; அவர் "இப்போது குளிர்ச்சி பிறக்க வேருெரு காரணமும் இல்லையே, ஆகையால் நமக்கினிச் சாகுங் காலம் வந்தது," என்று முடிவாக எண்ணினுர்.

இப்போது வந்த குளிர்ச்சிக்கு மாணவர்களும் வேறு வழி காணவில்லை; ஆகையால், படுக்கையிலுள்ள ஈரமும் குருவின் இருப்பிடக் குளிர்ச்சியால் வந்ததென்று நினைத்தனர்; அவர்கள் முன் பார்ப்பனன் சொன்ன சோதிடத்தின் கருத்தும் நிறைவேறுங் காலம் இதுதானென்று உறுதி செய்தார்கள். குருவைக் காணவந்த உரிமையாளரான மனிதரும் இவர்களோடொத்த அறிவுள்ளோ

ராதலால், அவர்களும் அவ்வாறே பேசினர். அவர்கள் சொன்னவற்றையெல்லாம் குரு ஒத்துக்கொண்டார். தம்மைக் குறித்துக் கேட்டவர்கள் எல்லோருக்கும் "ஆசன சீதம் சீவன் நாசம்," என்பதையொழிய வேறே மறுமொழி கூருது அதையே கூறிக்கொண்டிருந்தார்.

இவர் இவ்வாருக அடைந்த மனக்கவலை, உடல் வலிமைக் குறைவு ஆகிய இவைகள் நாளுக்குநாள் மிகுதிப்பட்டன. அவர் அவற்றையெல்லாம் தாங்க முடியவில்லை; ஒருநாள் மிகுதியான மனக்கவலையாய்க் கிடந்தார்; அதுகண்ட மாணவர்கள் 'காகூ'வென்று கூச்சலிட்டார்கள்; தலைமேற் கையை வைத்துக்கொண்டு "ஐயையோ எங்கள் ஆண்டார் மாண்டாரே! மடிந்து போனரே," என்று அலறி அழுது பிணத்தை அடக்கஞ் செய்ய வேண்டியதற்குரிய சடங்கெல்லாம் செய்தார்கள்.; பின்பு குளிப்பாட்டத் தொடங்கினர்கள்.

குருவின் மறைவு

பின்பு மடத்திலிருந்த பெரிய தொட்டி நிறையத் தண்ணீரை ஊற்றிப் பெருக்கினர்கள்; குருவை உள்ளவாறே பிணமென்று எண்ணி, அவரை அதிலே எடுத்துப் போட்டார்கள்; அவரை அதில் அமிழ்த்தினர்கள்; சுற்றிலும் பத்துப்பேர் கூடியிருந்து ஒருமிக்க உடம்பைத் தேய்த்துக் கழுவினர்கள். கழுவும்போது அவருக்கு மயக்கந் தெளிந்தது. ஆனலும் தண்ணீருக்குள் கையையும் காலையும் அவர்கள் பிடித்து அமிழ்த்துவதால் மூச்சுவிட மாட்டாமலும், சைகை காண்பிக்கக் கூடாமலும் மூடத்தன்மையால் அந்த மடையர்கள்

கையில் அகப்பட்டுப் பரமார்த்த குரு இயற்கைமுறை இன்றி இறந்தார்.

அதன் பின்பு அனைவரும் பெருங்கூட்டம் கூடினர்; அவர் உடலை அழகுபடுத்தி ஆடை மலர் முதலியனவற்றால் புனைந்தனர். பூந்தேர்கட்டினர்; அதற்குள் அவரை முறித்து வைத்தனர். சாவுக்குச் செய்யும் முறைப்படி சங்கு, தாரை முதலியன முழங்க எடுத்துக்கொண்டு, முன்னும் பின்னும் இருபக்கமும் மாணவர்கள் நெருங்கி வந்தார்கள்; அவர்கள் "ஆசன சீதம் சீவன் நாசம்," என்று ஆடிப் பாடிக்கொண்டுபோய் அடக்கக் குழி தோண்டி, அதில் அவரை வைத்துப் புதைத்து அடக்கஞ் செய்தார்கள்.

மேனாட்டு இலக்கியக் கதைகள் :

பன்மொழிப் புலவர், கா. அப்பாத்துரைப் பிள்ளை

முதற் புத்தகம் : இளவரசி, ஸோராபும் ரஸ்டமும் போன்ற ஆறு சிறுகதைகள் ரூ. 0 8
உயரிய பதிப்பு 0 12

இரண்டாம் புத்தகம் : ஆர்தர் வரலாற்றுக் கதைகளின் தமிழாக்கம். ரூ. 0 10
உயரிய பதிப்பு 1 0

நாலடியார் விளக்கக் கதைகள் :

திரு. க. இனியன்

நாலடியாரின் நற்கருத்துக்களமைந்த சில பாடல்கள் கதைகளின்மூலம் விளக்கப்பட்டுள்ளன. ரூ. 0 13
உயரிய பதிப்பு 1 4

திருக்குறள் விளக்கக் கதைகள் :

திரு. க. இனியன், எழுதியன.

திருக்குறள் மணிகளுள் குறிப்பான சில கதைகள்மூலம் விளக்கப்பட்டுள்ளன.

முதற் புத்தகம் : ரூ. 0 10
உயரிய பதிப்பு 1 0
இரண்டாம் புத்தகம் : 1 0
உயரிய பதிப்பு 1 6

பிறந்தநாள் :

புலவர், அரசு எழுதியது.

ஒரு சிறந்த வாழ்வியல் நாடகம். வாழ்வியலின் சாயையிலே ஒரு அருமையான படிப்பினையை நல்குவது. பிறந்த நாள், சமூகம் விழித்தெழுந்துள்ள புதிய சூழ்நிலைக்கேற்ற அரிய நாடக அமைப்பு. நடிப்பதற்கும் ஏற்றது. ரூ. 1 8

இலக்கியச் சிறுகதைக் கொத்து :

சுவைபான கதைத் தொடர்புடன் கூடியதாக அமைந்த இலக்கியங்களின் கதையமைப்புக்களும், கதையமைந்து விளங்கும் தனிப்பாடல்கள் பலவற்றின் கதையமைப்புக்களும் இன்பம் நல்கி, மொழிவளத்தை வளர்ப்பனவாகும். அத்துடன் தமிழ்நாட்டின் பழக்கவழக்கங்களை அறியவும் இலக்கியங்களை எளிதாகக் கற்றுப் பயன் பெறவும் அவை உதவும்.

முதற் பகுதி	ரூ. 1 8	மூன்றும் பகுதி	ரூ. 2 0
இரண்டாம் பகுதி	1 12	நான்காம் பகுதி	2 4
		ஐந்தாம் பகுதி	2 8